# வெள்ளிமலை

இதழ் – 08 மார்கழி 2009




தேசிய உள்ளூராட்சி மாநாட்டு கண்காட்சியில் வலி. தெற்கு பிரதேச சபை காட்சிக் கூடத்துக்கு வருகை தந்த உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஜானக பண்டார தென்னக்கோன் மற்றும் அதிகாரிகள்



கே. எஸ். ஆனந்தன்

இணுவில்

50/=

# தேசிய வாசிப்பு மாதம்
# ஒக்ரோபர்
# 2009

## வெற்றிகரமான வாழ்க்கைக்காக வாசிப்போம்



**வலிகாமம் தெற்கு பிரதேசசபை**
**பொது நூலகம்**
**சுன்னாகம் / உடுவில் /ஏழாலை**

# வெள்ளிமலை

வலிகாமம் பிரதேச வளங்கள், திறன்கள் வெளிக்காட்டிடும் சஞ்சிகை

மலை : 03 மார்கழி 2009 வெள்ளி : 08

> இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
> இசைந்தது புலவர்தரு சுவடிச்சாலை
> புனிதமுற்று மக்கள்புது வாழ்வுவேண்டில்
> புத்தக சாலைவேண்டும் நாட்டில்யாண்டும்
> - பாவேந்தர் பாரதிதாசன் -

வலிகாமம் தெற்கு பிரதேச
வாசகர் வட்ட வெளியீடு

இணை ஆசிரியர்கள்
க. சௌந்தரராஜன்
திருமதி இ. கருணாநிதி

ஆசிரியர் குழு
திரு. அ. தற்பரானந்தன்
திரு. ஐ. இராமசாமி
திரு. சு. ஸ்ரீகுமரன்
திரு. ப. சிவானந்தசர்மா
திரு. சி. றமேஷ்
திரு. கு. றஜீபன்
செல்வி. ஶ்ரீ. ஶ்ரீரங்கநாயகி

தொடர்புகளுக்கு
வெள்ளிமலை
சுன்னாகம் பொதுநூலகம்
சுன்னாகம்.

அச்சுப்பதிப்பு
கிருஷ்ணா பிறிண்டேர்ஸ்,
டாக்டர். சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

இச்சஞ்சிகையில் வெளியாகியுள்ள ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாளிகளாவர்.

## மலைமீதிலே

| | |
|---|---|
| எண்ணச்சாரல் | 02 |
| அகிம்சைவழி போராளி - ந. வைரவன் | 03 |
| ஈகை - வே. தயாபாலசிங்கம் | 04 |
| உங்களுக்குத் தெரியுமா - அருபாயன் | 06 |
| கவிதை – மூத்தோர் வழி நடப்போம் - சி. பா. ஹரிசக்தி | 07 |
| சித்த மருத்துவத்தில் நாடி அறிவியல் - Dr. வெ. சக்திவேல் | 09 |
| நாடகம் – முகத்தார் வீடு - ந. திவாகர் | 11 |
| தெருப்பயண ஞானம் - கோப்பாய் சிவம் | 15 |
| மட்டக்களப்பின் பொக்கிஷங்கள் | 26 |
| - D. ஷெரின் நிரஞ்சி | 17 |
| அகராதிகள் ஆக்கத்தில் கந்தரோடை ந. சி. கந்தையா - க. துரைசிங்கம் | 18 |
| அகவரிகள் கடிதங்கள் | 22 |
| தற்கால சிறுவர் நிலை - ய. தரணிகா | 26 |
| நாடக விமர்சனம் - எஸ். றீ. அருள்குமரன் | 27 |
| பன்னுதமிழ் சொன்ன மன்னாகத்தான் - சி. றமேஷ் | 30 |
| சொக்கரி - எஸ். றீ. குமரன் | 41 |
| உங்களுக்குத் தகவலைப் பற்றித் தெரியுமா - சுமனா ஜெயசூரியா | 47 |

## எண்ணச்சாரல்

### ஆவணப்படுத்தல்

செம்மொழியாக விளங்கும் தமிழ்மொழியின் இலக்கியங்கள் காலத்துக்கு காலம் பல்வேறு நடைமுறைச் சாத்தியமான வழிகளில் வெளியாகி பரந்துபட்ட பாவனைக்குக் கிடைத்து வந்துள்ளன. கல்வெட்டுகளில், ஏடுகளில், அச்சு ஊடகங்களில், ஒலி, ஒளிப்பதிவு வடிவங்களில், இலத்திரனியல் ஊடகங்களில் இவற்றின் பதிவுகள் காணப்படுகின்றன.

எவ்வகையான பதிவுகளும் அக்காலப் பகுதிகளில் நிலவும் சமூக, பொருளாதார, அரசியல், இயற்கை சார்ந்த காரணிகளால் பாதிக்கப்பட்டு இழக்கப்படுதலும் சமாந்தரமாகவே நிகழ்ந்து வருகின்றன. இவ்வாறான காரணிகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட மொழியாக தமிழும் ஒரு காலத்தில் பேசப்படக்கூடிய நிலை இருப்பதனை நாம் அனுபவபூர்வமாகவே உணர்வோம்.

ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒரு சில அமைப்புக்களோ, தனிநபர்களோ காட்டிய "அதீத கரிசனை" காரணமாக இழக்கப்படும் வீதம் குறைக்கப்பட்டோ, தடுக்கப்பட்டோ, காப்பாற்றப்பட்டோ வந்தாலும் வெளியீடுகளின் வேகத்துக்குத் தக்கதாக இலக்கியங்களின் பேணுகையோ, ஆவணப்படுத்தலோ ஆக்கியவர்களின் வாழ்வியல் தகவல்களோ பூரணமாகப் பேணக்கூடிய வகையிலான அமைப்புக்கள் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் ஏற்படவில்லை எனலாம்.

தகவலை, ஆவணத்தை, வெளியீட்டை தேடியலையும் பரிதாப நிலையே காணப்படுகின்றது. பிரதேசங்களில் ஏற்படும் ஆவணப்படுத்தல் ஊடாக, நாடுகள் கடந்து சர்வதேச நிலை வரை சீரமைப்புத் தன்மையுடன் ஒரு ஆவணப்படுத்தலும் அதற்கு சகல மட்டத்திலான பங்கேற்பும் அதற்கான உலகலாவிய தொடர்பு மையங்களும் நவீன இலத்திரனியல் சாதனங்களினூடாக மொழியின் நிலவுகைக்கான முயற்சி நிலை நிறுத்தப்பட வேண்டும் எனக் கருதுகின்றோம்.

அதிருஷ்டவசமாக சிலர் "முன் முயற்சிகளை" அமைப்பு ரீதியாகவும் தனிப்படவும் ஆரம்பித்துள்ளார்கள். தனிப்பட்ட நலவுரிமை சார்ந்து சிந்திக்காமல் பரந்துபட்ட மொழியின் நலன் கருதி யாபேரினதும் பங்கேற்புகளினூடாக இதனைச் சாத்தியப்படுத்து வோமா?



# அகிம்சை வழிப் போராளி உத்தமர் மகாத்மா காந்தியடிகள்

து. ஜெயரூபன்
கந்தரோடை.

தியாக உணர்வுடன் சத்தியாக் கிரகத்தைப் பின்பற்றி பாரத நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்த மகான் காந்தியடிகளை யாரும் மறந்துவிட முடியாது. "சத்தியமே வெல்லும்"என வாய்மையைப் போற்றி வாழ்ந்த உத்தமபுருஷன் ஆவார். பேச்சிலும் சிந்தனையிலும் செயலிலும் உண்மையைக் கடைப்பிடிப்பதே சத்தியமாகும். காந்தியடிகள் சிறுவயதில் அரிச்சந்திரன் நாடகத்தில் தன்மனதைப் பறிகொடுத்தார். வாழ்க்கையில் எத்தனையோ தடைகள், சோதனைகள், வேதனைகள் ஏற்படினும், அரிச்சந்திரனைப் போல் தாமும் வாய்மையில் வழுவாது நடக்க ஆசைப்பட்டார்.

பலாத்காரத்தையோ, படைபலத்தையோ விரும்பாத அடிகள், சத்தியம், அன்பு, அகிம்சை என்ற மூன்றையும் துணையாகக் கொண்டார். போராட்ட வழியாக உண்ணா நோன்பை மேற்கொண்டார். சத்தியாக்கிரகங்களைத் தொடக்கி வைத்தார். வள்ளுவர் காட்டும் மாசற்றவர்களுள் ஒருவராகக் காந்தியடிகள் விளங்கினார். கீதை கூறும் நிட்காமிய கருமமாகிய பலன் கருதாது கடமையைச் செய்யும் "செயலில் துறவினை" வலியுறுத்தினார். இந்து மதத்தின் கோட்பாடுகளில் கடவுட் கோட்பாட்டில் பூரண நம்பிக்கை கொண்டிருந்தார். மனிதாபிமானியாக வாழ்ந்தார். இவ்வகையில் இவருடைய சிந்தனைகள் இந்துமதச் சிந்தனைகளுடன் நெருங்கிய தொடர்பு உடையவை. இந்து மதத்தின் அரிய பண்புகள் என்றும் உயிருள்ளவை; அழியாப் புகழ் பெற்றவை; வாழ்க்கைக்குத் தென்பும் பயனும் நல்குபவை என வாழ்க்கையின் மூலம் எடுத்துக் காட்டியவர் அண்ணல் காந்தியடிகள். 1948 ஆம் ஆண்டு தாம் அமரத்துவம் அடையும் வரை சத்தியம், அன்பு, அகிம்சை என்னும் ஆன்மீகப் பண்புகளைத் தம் அன்றாட வாழ்வில் போற்றி வந்தார். அவற்றுள்ளும் சத்தியத்தில் அவரிற்கு கூடிய ஈடுபாடு இருந்தது. அதற்குச் சேவை செய்வதை ஒரு தெய்வீகப் பணியாகக் கொண்டார். ஆன்மீகப் பலத்தினால் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து



இந்தியாவிற்கு விடுதலை பெற்றுக் கொடுத்தார். மக்கள் வையகத்தில் வாழ்வாங்கு வாழ இனிதே வழிகாட்டினார். காந்தியை ஒரு புதியமனிதராக உருவாக்கியது கடவுள் பக்தியே. கடவுள் எனும் உயர்ந்த சக்தி தமக்கு என்றும் உறுதுணையாக இருந்ததாகக் கூறியுள்ளார்.

நாமும் காந்தியடிகள் போன்று இறை நம்பிக்கையோடு இலட்சிய புருஷர்களாக எம் மத்தியில் எழுவோம்; புது உலகம் படைப்போம்.

■

# ஈகை

வே. தனபாலசிங்கம்.

'ஈ' என்பதை வினைச் சொல்லாகப் பார்க்கும் போது கொடுத்தல், தருதல் என்று பொருள் கொள்வர். 'ஈகை' என்பதைப் பெயராகப் பார்க்கும் போது பொருளுதவி, கொடை என்று பொருள் படலாம். பெருந்தன்மையோடு செய்யப்படும் பொருள் உதவி என்றும் பொருள்படும். ஈ என்ற எழுத்தும் கை என்ற எழுத்தும் சேர்ந்தே ஈகை என்ற சொல் பிறந்தது. கொடுப்பது கை என்பதால் இப்படி வந்திருக்கலாம்.

அன்பான உள்ளம் உள்ள மனிதன் பிறரது வறுமைத்துன்பத்தைக் கண்டு அவர்களின் நிலையைச் சீர் பெறச் செய்வதற்குப் பணமோ, பொருளோ கொடுப்பதுவே ஈகை எனப்படும். ஔவையார் "ஈவது விலக்கேல்" என்றார். வள்ளுவர் "வறியார்க்கொன்று ஈவதே ஈகை" என்றார். சிறந்த பண்பாளர்கள் வறியவன் வாயால் கேட்காமலே அவனது நிலைமை அறிந்து ஈவர். அன்புள்ளவர்கள் தமது உடலைக் கூடப் பிறருக்கு நல்குவர். சிபி பறவையை விடுவிக்க தன் தசையை வெட்டிக் கொடுத்தார். கொடையிற் சிறந்தவன் கன்னன் என்பர். யார் எதைக் கேட்டாலும் கொடுக்கும் மனப்பாங்கு உள்ளவன்.

பண்டைக் கால மன்னர்களும் குடிமக்களும் தாம் ஈட்டிய பொருளை இல்லாதவர்களுக்கு உதவி இன்பம் கண்டனர். பெருஞ்சித்திரனார் என்ற புலவர் குமணவள்ளலிடம் தாம் பெற்ற பொருளைத் தன் மனைவியிடம் கொடுத்துச் சொன்னார்.– "இப்பொருளைக் கொண்டு நாம் வளமுற வாழலாம் என்று எண்ணாதே. உன்னை விரும்பி வாழ்பவர்களுக்கும், உனது சுற்றத்தினர் அனைவருக்கும் அவர்கள் பசி தீர இப்பொருளை நீ வழங்குதல் வேண்டும். அதுபற்றி என்னுடன் ஒன்றும் பேசவேண்டாம். கொடுப்பவரே பெரியோர் என்றும் கொடுக்காதவர் இழிந்தோர் என்றும் எண்ணிய காலம் உண்டு. இட்டார் பெரியோர் இடாதோர் இழி குலத்தோர் என்பர்."

அறங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த அறம் எது என்றால் "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

எம்மிடம் உள்ளவற்றை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து உண்டு எல்லோரையும் பாதுகாத்தலே சிறந்த அறம். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே" என்பதையும் நாம் மனதில் இருத்துதல் வேண்டும். இந்த மானிடப்பிறவி அரியது. உடம்பிலே உயிர் இருப்பதற்கு உணவு வேண்டும். அந்த உணவைக் கொடுப்பது உயிர் கொடுப்பதற்குச் சமனாகும். மிகக் கொடிய பசிப்பிணியைத் தீர்த்தவருக்குக் குறைபாடு ஒருகாலும் அணுகாது. அவரது ஈகை உதவியளிக்கும்.

ஒருவர் தன் பொருளை – வருமானத்தை ஐந்தாகப் பிரிக்க வேண்டும். தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தினர் என்ற நான்கு பகுதியினர்க்கும் கொடுத்து ஐந்தாவது பகுதியைத் தனக்கும் எடுக்க வேண்டும் என்று திருவள்ளுவர் சொன்னார். இதிலே தென்புலத்தார் என்பது யார் என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. சிலர் பிதிரர் என்பர். சிலர் தமிழ் நாட்டுப் புலவர்கள் எனவும், தமிழர் குருமார் என்றும் கூறுவர். வள்ளுவர் விரும்பியது பொருளைத் தான் மட்டும் அனுபவிக்காமல் சமுதாயத்தில் உள்ள பலருக்கும் பங்கிட வேண்டும். என்பதே, அதனால் பயன்கிடைக்கும் என்பது பெருந்தகையின் நம்பிக்கை.

உலகம் போற்றும் உத்தமராகக் காந்தி வாழ்ந்து காட்டியிருக்கிறார். தென்னாபிரிக்காவில் இந்திய ஏழை மக்களுக்காக பல ஆண்டுகள் அங்கிருந்து உழைத்தவர். பல வழிகளிலும் முன்னேற்றப்பாதைக்கு வழிகாட்டியவர். இவர்கள் தாய் நாட்டிற்குத் திரும்பி வரும் போது, அங்கே தங்கம் அதிகம், இவர்கள் மீது அன்புள்ளவர்கள் பெருந்தொகைத் தங்கம் அன்பளிப்புச் செய்தனர். இவரது மனைவிக்கு மட்டும் அறுபத்திரண்டு தங்கப்பவுண் கொடுத்தார்கள்.



இந்தியாவுக்கு வந்த பின் காந்தி சொன்னார் "எமக்குக் கிடைத்த தங்கம் முழுவதும் இந்திய மக்களுக்கு உரியது" கணவன் மனைவிக்குள்ளே சிறு பிணக்கு ஏற்பட்டது. பிள்ளைகள் தாய்க்குப் புத்தி சொல்லி அப்பாவின் விருப்பத்திற்கே விட்டார்கள். தன்னலம் இல்லாதவர், பதவியை விரும்பாதவர் தமக்குக் கிடைத்த பொருளை நாட்டிற்கோ, நாட்டு மக்களுக்கோ ஈவர் என்பதை நாம் அறிகின்றோம்.

ஐம்பது வருடங்களுக்கு முன் யான் கண்டவை – கமக்காரர் சிலர் நெல், வரகு, தினை விளைவிப்பவர்கள், அறுவடை முடிந்த பின் அவற்றை விற்றுப் பணத்தை வங்கியில் போடவில்லை. தமது தேவைக்கு வைத்துக் கொண்டு மீதியை அயலவர், உறவினர், தச்சுவேலை செய்வோர், இரும்பு வேலை செய்வோர். சலவைத் தொழிலாளி – ஆகியோருக்குப் பங்கிட்டுக் கொடுத்தனர். பனையிலிருந்து பெறும் பனம்கொட்டையைக் கடற்கரையில் உரியகாலத்தில் புதைத்து, கிழங்காகிய பின் கிண்டி எடுத்து அதனையும் பங்கிட்டுக் கொடுத்தனர். அவர்கள் பொருள் வைத்த வங்கி இல்லாதவர்களின் வயிறு. வள்ளுவர் சொன்னதைப் படித்தவர்கள் அல்ல. தாமாகவே உணர்ந்து ஈகை செய்தனர். அன்றைய நிலை இன்று இல்லை.

ஈதல் எப்படி? முகமலர்ந்து ஈதலே நன்று. மனம் விரும்பிக் கொடுத்தல் வேண்டும். இடக்கை அறியாமல் வலக்கை கொடுக்க வேண்டும் என்று கூறுவர். புகழை விரும்பிக் கொடுத்தல் தகாது. ஔவைக் கிழவி களைப்படைந்த நிலையில் பகல் நேரத்திலே செல்வதைக் கண்ட விவசாயி ஒருவர் ஔவையாரைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். முற்பக்கத்தில் கிழவி இருக்கிறார். கணவன் வீட்டுக்குள் போய் மனைவியின் விருப்பத்துடன் விருந்தாளியை உபசரிக்கக் கேட்ட போது மனைவி ஈளகை எடுத்து அடிக்கப் போய் விட்டாள். ஒரு மாதிரி மனைவியைத் தன் வசப்படுத்தி உணவு படைத்து ஔவையாருக்குக் கொடுத்த போது அவரது கையும், வாயும் இடம் கொடுக்கவில்லை. எழும்பிச் சென்று விட்டார். "அன்பில்லாள் இட்ட அமுது" கிழவிக்கு விருப்பம் இல்லை.. தலைவன் தலை குனிந்தான். கவலைப்பட்டான். இப்படியானவர்களும் ஊரில் உளர். ஒரு பொருளை நாம் பார்க்கும் போது இருகண்களும் சேர்ந்தே பார்க்கின்றன. இதே போலத் தலைவனும் தலைவியும் மனம் விரும்பி அன்புடன் ஈதல் வேண்டும்.

ஈதல் பற்றி வேறொரு கோணத்திலிருந்து சிறிது பார்ப்போம் "ஈவது விலக்கேல்" என்றவர், "ஏற்பது இகழ்ச்சி" என்றும் "அறஞ் செய விரும்பு" என்றும் கூறியுள்ளார். ஈதல் பகுத்தறிவு படைத்த மனிதனின் கடமை. அவன் அறஞ் செய விரும்ப வேண்டும். ஆனால் மனிதன் மதிப்பாக வாழ விரும்புபவன், மானம் ஒன்றே பெரிதென மதிப்பவன். சிறப்பான வாழ்க்கை வாழ விரும்புவன். மற்றவர்களிடம கையேந்த மாட்டான். ஏற்பது அவமானம் "ஏற்பது இகழ்ச்சி" இகழ்ச்சி என்றால் அவமானம் என்று பொருள் கொள்வர். கஞ்சி குடித்தாலும் தான் முயன்று பெற்ற ஊதியத்தைக் கொண்டு வாழ வேண்டும்.

'பாத்திரம் அறிந்து பிச்சை கொடு' என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். அங்கக் குறைவுடையோர், நோயாளிகள், வயது முதிர்ந்த வறுமையாளர், அநாதைகள். அகதிகள் ஆகியோருக்கு ஈதல் நன்று. உடுக்க உடையில்லாதவர், இருக்க இடமில்லாதவர், படிக்கவசதியற்றவர், முயன்றும் பொருள் ஈட்ட முடியாதவர், வினைப் பயனால் பொருளில்லாதவர் ஆகியோருக்கும் ஈதல் நன்று.

பணம் உள்ளோர் தொழில் வளங்களைப் பெருக்கி, வேலையற்றோருக்குத் தொழில் வாய்ப்புக் கொடுத்து, நாட்டின் வளம் பெருக ஈவது சிறப்புடையதாகும். நல்ல மனத்துடன் ஈவோம். நாடுவளம், பெறச் செய்வோம்.

# உங்களுக்குத் தெரியுமா ?



அநுபாயன்
ஏழாலை

**1. டிஸ்னி உலகம்.**

மக்களாகப் பிறந்தவர்கள் எப்போதும் சிரித்துச் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தனது வாழ்நாள் முழுவதையும் கழித்தவர் யார் தெரியுமா? அவர்தான் வால்ஸ்டிஸ்னி என்ற மனிதர். கார்ட்டூன் என்னும் திரைப்படம் மூலம் உலகத்தையே தன்பால் கவர்ந்து கொண்டவர்.

அமெரிக்காவில் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரிலிருந்து தென்கிழக்கே உள்ள என்ற இடத்தில் உள்ளது தான் இந்த மகிழ்ச்சி மிக்க நகரமான டிஸ்னி உலகம். "டிஸ்னிலான்ட்" என்னும் இந்த அற்புத உலகத்தில் பழைய கால நாகரீகத்தன்மையையும் இன்றைய கால உலகப் பங்கையும் காணக்கூடியதாக உள்ளது. பண்டைய மக்களின் உலகத்தோடு இயற்கையின் தன்மையும் அவ்வாறே அமைக்கப்பட்டுள்ளது. இந்த உலகம் அற்புதங்களை பார்ப்பதற்காக உருவாக்கப்பட்டது மட்டுமன்றி வாழ்ந்து காட்டவும் செய்துள்ளார்கள்.

ஆறுகள், மலைகள், பாலைவனங்கள், கணவாய்கள், குகைகள், நீர்வீழ்ச்சிகள், பள்ளத்தாக்குகள் என்பன மட்டுமன்றி ஒட்டகச்சவாரி, நெருப்புக் கோழிச் சவாரி என்பனவும் உண்டு. ஏன் பேய் ஆவி என்பனவற்றுடன் பழைய தூக்கு மேடை, சித்திரவதைக் கூடம் நவீன யுத்த வித்தைத்தன்மைகளும் உள்ளன.

இந்த உலகில் நுழைந்து, பார்த்து, ரசித்து மகிழ பல அம்சங்கள் உள்ளன. டிஷ்னி உலகப் படைப்புக்களான மிக்கி மவுஸ், டோனால்ட்டிக் புளுட்டோ போன்ற படைப்புக்கள் உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றன. போய் வருவோமா டிஸ்னி உலகிற்கு.

2. காற்று அரண்மனை.

"ஹவர் மஹால்" என்ற ஹிந்திப் பெயர் கொண்ட இந்த அரண்மனை ஜெய்ப்பூரில் இருக்கின்றது. 'ஹவர்' என்ற ஹிந்திச் சொல்லின் கருத்து காற்று என்பதாகும். இந்த அற்புதக்கட்டிடத்தை சுமார் 200 வருடங்களுக்கு முன் பிரதாப்சிங் என்ற மகாராஜா கட்டினார். ஐந்து மாடிகளைக் கொண்ட இந்த அரண்மனையில் யாரும் வாழ்ந்ததில்லை. இந்தப் பெரிய கட்டிடத்தின் மேல் மூன்று மாடிகளுக்குப் போக படிக்கட்டுக்கள் உள்ளன. அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய 900 ஜன்னல்கள் உள்ளன.

மன்னன் அரண்மனைப் பெண்கள் இந்த ஜன்னல்கள் வழியாகத் தெருவில் – ராஜவீதியில் – நடக்கும் நிகழ்வுகளைக் கண்டு களிக்கக் கட்டுவித்தான்.

உண்மையில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய நெடிதுயர்ந்த சுவர் தான் இது. சிவப்பு நிற மணல் கற்களால் குடையப்பட்ட தட்டுக்களால் மூடப்பட்டவை. ராஜஸ்தான் கட்டடக் கலையின் விசேடத்தன்மையை இங்கு காணலாம். இவ்வமைப்பின் சிறப்பு யாதெனில் வெப்பத்தைக் குறைத்து இதமான காற்றோட்டத்திற்குப் போதிய வசதி செய்துள்ளமையாகும். இதனால் தான் போலும் இவ்வரண்மனையைக் 'காற்று அரண்மனை' என அழைக்கின்றனர். போலும், நாமும் ஓர் முறை காற்றரண்மனைப்போய் வருவோமா. ■



# மூத்தோர் வழிநடப்போம்.

சி. பா. ஹரிசக்தி

இறந்தகால எருக்களில் தான்
நிகழ்காலப் பயிர்கள்
எதிர்கால நினைவுகளுடன்
ஊன்றி வளர்க்கப்படுகின்றன.
மனிதம் கண்ட
மகத்தான சாதனைகளில்
இதுவும் ஒன்று

துளிர் விடுகின்ற
இளஞ் சமுதாயத்திற்கு
நீர் ஊற்றுகின்ற
நீர் வீழ்ச்சிகள் தான்
மூத்தோர் எனும் முதுசங்கள்
காற்றிடம் கொஞ்சம்
நீரிடம் கொஞ்சம்
மண்ணிடம் கொஞ்சம்
வெப்பத்திடம் கொஞ்சம்
கடன் வாங்கி கொண்டுதான்
விதை கூடத் தன்
உறக்கத்தை உதறி
விழிக்கிறது;
இவர்களும் அப்படித்தான்
ஓரோர் பொழுதில்
ஒவ்வொருவர்
காற்றாய், நீராய்
இவர்களுக்கு
விளங்கி யிருக்கிறார்கள்
மூத்தோர்கள்
முதுகு கூனி மூலைக்குள்
முடங்கவேண்டியவர்களல்லர்;

தேசத்திருளை நீக்க வந்த
தேசாபிமானிகள்
தடம்மாறிப் போகும்
எம் பாதையில்
கரம் பிடித்து கரை
சேர்ப்பவர்கள்
இவர்கள் எங்களுக்கு
பகர்வன வெல்லாம்
பழிச் சொற்களல்ல
நாளை பாரை ஆள
உதவும் பொன் மொழிகள்

இலக்கியங்களும் இலக்கணங்களும்
அமிர்தத்தை
கனவில் காணச் செய்யும்;
நிஜத்தில் அமிர்தம்
காண வேண்டின்
அது
மூத்தோர் விளம்பிடும்
சொற்களில் உண்டு.

முதுகில் சமுத்திரத்தையும்
அடிவயிற்றில் நெருப்பையும்
கட்டிக் கொண்டு
நீண்ட தூரம் ஓடிவந்த
நிறை கலைஞர்கள்
இவர்கள்......

இத்தகைய பெருந்தகையோர்
ஒரு கலாச்சார வாழ்வின்
விம்பங்களை கடைசி காலம் வரை
சரித்திரமாய் சொல்வார்கள்.

மாணவர்கள் எங்களின்
யுகபுருஷர்கள்
இவர்கள் தான்
சினிமாக் கதாநாயகர்களும்
இலக்கிய புருஷர்களும்
அல்ல
புரிந்து கொள்ளுங்கள்
ஒரு
சர்வதேச அறிவுப்பாதை
உங்கள் காலடியில்
கிடக்கிறது.

உங்கள் அறிவுப்பசியை
தீர்க்க
அந்தப் பாதைகளில்
நீர் சொரிகிறது;
அதை கண்ணீராக்காமல்
பன்னீராக்குவது
உங்களின் கைகளில்தான் –
உயர உயரப் பறந்து
ஊர்க்குருவி பருந்தாகாது
மூத்தோர் சொல்கேட்டால்
ஒரு

புது வரலாறு காணலாம்.
என்ன தவம் செய்தனை
நெஞ்சமே என்று
உங்கள் செயல்களுக்கு
வாய்ப்பூட்டு போடாதீர்கள்.
சமுதாயத்தின் அத்திவாரக்
கற்களாய்
மூத்தோர் இருக்கிறார்கள்;
அந்த

அத்தி வாரத்தை
ஆட்டம் காண வைக்காமல்
அதன் மேல்
உங்கள் செயல்களை
நிறுத்துங்கள்

இமயமாய் இருக்கிறது
மூத்தோரின் வார்த்தைகள்
உலகத்திற்கான திறவு கோல்கள் அவை
மாணவச் சமுதாயமே
இனியொரு விதி செய்வோம்
அதை
மூத்தோர்கள் வழி யெடுத்து
சமர்ப்பணம் செய்வோம்.
அதை
மூத்தோர்கள் வழியெடுத்து
சமர்ப்பணம் செய்வோம்

சத்தியமாய் இவர்கள்
சந்தனக்
கட்டைகள் தாம்
சாக்கடைகள் அல்ல
மூத்தோர் சொல் கேட்டு
நிமிர்வோம்;
வாழ்வில் நாம்.......



# சித்தமருத்துவத்தில் நாடி அறிவியல்

சைவப்புலவர், சித்தாந்தபண்டிதர்.
– டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்
B.A [with Eng. Lit], B.S.M.S.
P.G. Dip in Ed, P.G.Dip in Pub Adm

சித்தமருத்துவத்தில் நாடி மூலம் நோயை இனங்காணுதல் (Pulse Diagnosis in siddha Medicine) முக்கிய இடத்தைப் பெறுவதோடு மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையிலான உளரீதியான தொடர்பு நாடி பார்த்தல் மூலம் வலுப்பெறுகின்றது. கண்ணுக்குப் புலப்படக்கூடிய அசைவுகளை மட்டுமல்லாது கண்ணுக்குப் புலப்படாத கலங்களில் காணப்படும் தோடங்களின் அசைவுகளைக்கூட நாடி பார்த்தல் மூலம் அறியக்கூடியதாயிருக்கின்றது. நாடி என்பது நோயாளிகளின் உடல் நிலையை , உள நிலையை நாடுதல் என்ற பொருளில் அமைவதோடல்லாமல் அதற்கு அடிப்படையாகத் தன்னை அறிதலே சித்தர்களின் நாடி பார்த்தலில் முதன்மையாகக் காணப்படுகின்றது.

**நாடி பார்க்கும் மாதமும் காலமும்**

*"சித்திரை வைகா சிக்குஞ்
செழுங்கதி ருதயந் தன்னில்
அத்தமா மானி மாடி
ஐப்பசி கார்த்தி கைக்கும்
மத்தியா னத்திற் பார்க்க
மார்கழி தையு மாசி
வித்தகன் கதிரோன் மேற்கில்
விழுகின்ற நேரந்தானே"*

*"தானது பைங்கூ னிக்குந்
தன துநல் லாவ ணிக்கும்
மான மாம் புரட்டா சிக்கும்
மற்றை ராத் திரியிற் பார்க்கத்
தேனென்ற மூன்று நாடித்
தெளிவாகக் காணு மென்று
கானமா முனிவர் சொன்ன
கருத்தை நீ கண்டு பாரே"*

*(அகத்தியர் நாடி)*

சித்திரை வைகாசி மாதங்களில் சூரியோதயத்திலும் ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மத்தியானத்திலும், மார்கழி, தை, மாசி, மாதங்களில் சூரியஸ்தமனத்திலும் பங்குனி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் இரவு வேளையிலும் நாடிபார்க்கும்போது நாடி நடை தெளிவாகப் புலப்படும் என்பதோடு பொதுவாகச் சித்தமருத்துவர்கள் காலையிலே நாடியைப் பார்க்கும்போது தெளிவாக அறியக்கூடியதாக இருப்பதையும் அனுபவம் மூலம் காணலாம்.

*"கன்னி யர்க் கிடப்புறமாம் கணவர்க் கங்கே*
*மைகின்ற வலப்புறமாம்"*

ஆண்களுக்கு வலது கையிலும் பெண்களுக்கு இடது கையிலும் நாடி பார்க்க வேண்டும் என்று சித்தமருத்துவ நாடி அறிவியல் கூறுகின்றது.

**கர்ப்பநாடி**

*"காரிகை தமக்குப் பிள்ளை கருப்பையைப் பற்றி நின்றால்*
*சூரிய வாத நாடி குண்டலப் புழுப் போலூரும்*
*வீரிய மூன்றாந் திங்கள் விட்டில் போற் பதைத்து நிற்கும்*
*பாரிய எட்டாந் திங்கள் பையவே புழுப்போலூரும்"*

வாதநாடியானது ஆரம்பத்தில் குண்டலப் புழுப்போலூர்வதைக் கொண்டு கர்ப்பந்தங்கியுள்ளது என்றும் மூன்றாம் மாதத்திலிருந்து நாடி நடை விட்டில் போல காணப்படும் என்றும், எட்டாம் மாத்திலிருந்து புழு ஊர்வது போல நாடி நடை இருக்கும் என்றும் சித்தமருத்துவ நாடி அறிவியல் குறிப்பிடுவதிலிருந்து பெண்களின் கர்ப்பத்தை நாடிமூலம் அறியக் கூடியதாக விருக்கின்றது. தற்காலத்தில் HCG test, Scanning மூலம் கர்ப்பத்தை அறிவதைக் காணலாம்.

**மரணநாடி**

சித்தமருத்துவத்தில் மரணநாடி, தூதன் குறி, சகுனம், சரம், சோதிடம், மரணக்குறி ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு ஒருவரது மரணத்தை நாடி பார்ப்பதன் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. ஒருவரின் மரணத்திற்கு முன்பாக வாதநாடி அதிகரித்து பித்தநாடி அடிக்காது கப நாடியானது அதிகரித்து பின் குறைந்து கொண்டு வரும். பின்னர் வாதநாடியும் விழுவதைக் காணலாம்.

*"பித்த மடங்கி னாற் பேசாதே போய்விடு*
*எத்திய வையம் எழுந்திழற் கிட்டாதே*
*எத்திய வாத மெழும்பின் மருந்து செய்*
*எத்திய மூன்றி னியல்பை மறிந்திடே"* *(திருமூலர்)*

பித்த நாடியானது அடங்கிக் காணப்படின் மருத்துவம் செய்வதில் பயனில்லை. ஐயநாடி மட்டும் தனித்து அதிகரித்துக் காணப்படினும் மருத்துவம் செய்வதில் பயனில்லை. வாத நாடியினது ஒட்டம் காணப்பட்டால் மருத்துவம் செய்யலாம் எனக் கூறப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ■



# முகத்தார் வீடு

ந. திவாகர்

பொன்னம்மா: உங்களுக்கென்ன நிம்மதியா நல்லா நீட்டி நிமிர்ந்து கிடவுங்கோ

முகத்தார்: என்னடியப்பா சும்மா சரியக் கூட விடமாட்டியே

பொண்ணம்மா: நேற்று உங்களிட்டை என்ன சொன்னான் புதன் கிழமை கொழும்புக்கு போக வேணும் சீலன்ரை வானுக்குச் சொல்லச் சொல்லி எல்லோ

முகத்தார்: இப்ப என்னத்துக்கு திடீரெண்டு கொழும்புக்கு

பொண்ணம்மா: சரியாப் போச்சு வயசுபோனா அறளை பேந்து போகும் எண்டது உண்மைதான் அதுதானப்பா தம்பி ராசன் பிரான்ஸ்சிலை இருந்து வாறனெல்லோ ஏயாப்போட்டிலை போய் கூட்டியர வேண்டாமே.........

முகத்தார் : அவன் வரச் சொல்லி சொல்லேலையே எதாவது ஒழுங்குகள் செய்திருப்பான்

பொண்ணம்மா: அவன் சொல்லாட்டிக்கு போகப்பிடாதே 10 வருஷம் வெளியிலை இருந்து வாறவனை கூப்பிடப் போகாட்டி ஊருக்கை என்ன கதைப்பினம்

முகத்தார்: போகேக்கை இந்த உருக்கத்தை காணேலை இப்ப வருகுது அதுசரி அவனுக்கு பேசி வைச்சிருக்கிற சம்மந்தபகுதி கொழும்பிலைதானே இருக்கினம் எப்பிடியும் அவைக்குச் சொல்லியிருப்பான்

பொண்ணம்மா: லூசாப்பா நீங்க பேசித்தான் வைச்சிருக்கு இன்னும் சம்மந்தம் கலக்கேலையே அவையை போகவிட்டா ராசன் கொண்டு வாறதெல்லாத்தையும் அப்பிடியே அமத்திப் போடுவினம்

முகததார்: அப்ப நீர் போய் அமத்தப் போறீர் வயசுபோன நேரத்திலை ஏன் அலைச்சல் எண்டு சொல்ல வந்தன்

பொண்ணம்மா: நீங்க வராட்டி நில்லுங்கோ நான் போறன் சம்மந்தி மாணிக்கத்தாரின்ரை குணம் உங்களுக்குத் தெரியாது ஏயாப்போட்டுக்கே பெடிச்சியை கொண்டு போய்க் காட்டி அப்பிடியே வறுகிப் போடும் மனுசன்

முகத்தார்: அதுவும் சரிதான் உன்ரை தம்பியும் பெம்பிளையைக் கண்டா என்ன செய்யிறதெண்டு தெரியாது இஞ்சையே எத்தினை பிரச்சனைகள் காட்டினவன்

**பொன்னம்மா:** சும்மா எதுக்கு பழசுகளை கிளறீங்கள் இப்ப அவன் வெளிநாட்டு மாப்பிளை

**முகத்தார்:** கொழும்பிலை போய் எங்கையப்பா தங்கிறது மாணிக்கத்தின்ரை வீட்டுக்கு போவமோ

**பொன்னம்மா:** சா.. சா..அங்கை போனா எங்கடை டிமான்ட் குறைஞ்சிடாது பேசாம ஒரு நாள் தானே லொஜ்சிலை தங்குவம்

முகத்தார்: ஏதோ ஆட வெளிக்கிடுறீர் நானும் சேந்தாட வேண்டிக்கிடக்கு வானுக்கு சொல்லிப்போட்டு வாறன்

(அடுத்தநாள் மாலை வான் ஒன்டு முகத்தார் வீட்டில் வந்து நிக்கிறது அதிலிருந்து ராசனும் இன்னொரு பெண்ணும் இறங்கி வருகினம்)

பொன்னம்மா: உங்கை பாருங்கோ ராசன் வாறான். அது ஆர் பக்கத்திலை மாணிக்கத் தாற்ரை பெடிச்சி சுமதி போலக் கிடக்கு

முகத்தார்: எனக்கு அப்பவே தெரியும் உன்ரை தம்பி என்ன வேலை செய்திருப்பான் எண்டு

பொன்னம்மா: ஒரு பிளானோடைதான் மாணிக்கத்தார் பெடிச்சியையும் சேத்து அனுப்பி வைச்சிருக்கிறார்.

முகத்தார்: பிளான் இல்லையடி உன்ரை தம்பின்ரை குணம் தெரிஞ்ச மனுசன் தனிய விட்டா ஊருக்கை என்ன செய்வான் எண்டு மனுசனுக்குத் தெரிஞ்சிருக்கு

பொன்னம்மா: இதெல்லாம் நான் இருக்கேக்கை எப்பிடி நடக்குதெண்டு பாக்கிறன் தம்பி ராசன் எப்பிடியடா இருக்கிறாய் இப்பிடி இழைச்சுப் போட்டியே?

முகத்தார்: இந்தா போனதைவிட இரண்டு மடங்கா வந்திருக்கிறான் இழைச்சுப் போட்டான் எண்டு சொல்லுறாய்

ராசன்: எப்பிடி அக்கா இருக்கிறீயள்? இரண்டுநாள் முன்னுக்கு வரக் கிடைச்சுது உங்களுக்கு என்னத்துக்கு கஷ்டம் எண்டுதான் நானே வந்திட்டன்

பொன்னம்மா: வாங்கோ பிள்ளை என்ன அப்பர் தனிய அனுப்பியிருக்கிறார் சும்மா சம்மந்தம் தான் பேசியிருக்கு ஊருக்கை பாத்தா வடிவில்லைத்தானே.

ராசன்: அக்கா என்ன இன்னும் பழைய காலத்திலையே இருக்கிறீயள் இப்பத் தைய காலத்திலை கலியாணத்துக்கு முன்னம் ஆணும் பெண்ணும் பழகினால் தான் ஒருவரை ஒருவர் சரியா புரிஞ்சு கொள்ள முடியும்



முகத்தார்: அது வாஸ்தவம் தான் தம்பி ஆனா ஒருவர் ஒருவற்றை மனசை புரிஞ்சு கொள்ளுங்கோ எண்டா பெடியள் எல்லாத்தையும் எல்லோ புரிஞ்சு கொள்ள நிக்கினம்

ராசன்: இதுக்குத்தான் அக்காவை சொன்னான் ஒருக்கா உங்களையும் கூட்டிக் கொண்டு வெளிநாட்டுக்கு வந்து அந்தக் கலாச்சாரங்களை பாக்கச் சொல்லி இது இங்கே அடைஞ்சு கிடந்து கொண்டு உலகம் விளங்காம நிக்கிறீயள்

முகத்தார்: தம்பி இப்பிடிச் சொல்லித்தான் இஞ்சையும் ஆட்கள் காதல் கலியாணம் திறம் என் கிறவை பிறகு பாத்தால் இரண்டு மூண்டு வருஷத்திலை கவிழ்ந்து போய் கிடக்குது

பொன்னம்மா: ராசன் நீ ஆம்பிள்ளையடா வெளிநாட்டு பிளானிலை நாலு பெட்டைய ளோடை பழகிட்டு வந்தாலும் டிமாண்ட்தான் மாணிக்கத்தாருக்கு எங்கை அறிவு போட்டுது பிள்ளையை தனிய அனுப்பிறதுக்கு

முகத்தார்: இஞ்சை பாற்ரா அக்காச்சி சொல்லுற புத்திமதியை வந்த பிள்ளையை வைச்சுக் கொண்டு கதைக்கிற கதையை முதலிலை பிள்ளைக்கு ஏதன் குடிக்கக் குடுமன்.

பொன்னம்மா: இல்லையப்பா பிள்ளையை நான் பேசேலை கல்யாணம் முடியாமல் இரண்டு பேரையும் பழகவிடுகிறது நம்மடை ஊருக்கு புதிசா எல்லோ கிடக்குது.

ராசன்: அக்கா இஞ்சை ஊரிலை இருக்கிற ஆட்கள்தான் இன்னும் மாறாமல் கிடக்கிறீயள் இப்ப வெளியிலை எங்கடையாட்கள் கலியாணம் முடிக் காமல் குடும்பம் நடத்தி பிள்ளை பிறந்தாப் பிறகே தாலிக்கட்டினம் இந்த விதத்திலை கொழும்பிலை இருக்கிற ஆட்களே மாறியிட்டினம் நீங்கள் தான்......

முகத்தார்: இஞ்சரும் இப்ப பெண்ணைப் பெத்தவையும் கொழும்புவாசிகள்தானே அவையே யோசிக்காமல் பிள்ளையை அனுப்பியிருக்கினம் நீர் ஏன் குதிக்கிறீர்

ராசன்: சரி அக்கா கதையை விடு ஒரு அட்டியல் கொண்டு வந்தனான் சுமதிக்கு குடும்பம் எண்டு ஒருக்கா பார்

பொன்னம்மா: (தன்ரை கழுத்தில் வைத்து பாத்துவிட்டு) சா.... நல்லாத்தான் இருக்கு அட்டியல்.

முகத்தார்: அட்டியல் நல்லாத்தான் இருக்கு ஆனா கழுத்து வடிவிலையே அப்பிடியே கழட்டிக் குடப்பா.

பொண்ணம்மா: வேண்டியும் தர மாட்டியள் ஆசைக்கு வைச்சுப்பாத்தாலும் உங்களுக்குப் பொறுக்காது

முகத்தார்: எனக்கு தெரியுமப்பா உம்மடை குணம்

ராசன்: அக்கா சரியான அலுப்பாக்கிடக்கு முதலிலை குளிச்சிட்டு வாறன் நல்ல தேத்தண்ணி ஒண்டு போட்டுத் தா பாப்பம்

(சுமதியையும் கூட்டிட்டு சமையலறைக்கு போற பொண்ணம்மா)

பொண்ணம்மா: பிள்ளை உமக்கும் தேத்தண்ணி போடுறன் நீரும் குளிச்சிட்டு வாருமன்

சுமதி : பாத்றூம் எங்கையன்ரி இருக்கு?

பொண்ணம்மா: பிள்ளை பாத்றூம் இல்லை கிணத்தடிதான் உந்தச் சட்டையோடையே குளியும்

சுமதி: ஐயோ என்ன அன்ரி எனக்கு பாத்றூமிலை குளிச்சுத்தான் பழக்கம் இதென்ன முத்தவெளியிலை குளிக்கச் சொல்லுறியள்

பொண்ணம்மா: பிள்ளை முந்தி நீங்க 18 வயசுமட்டும் வடலியடைப்புக்கை இருக்கேக்கை பொது கிணத்திலைதான் குளிக்கிறதெண்டு அம்மா சொன்னா இப்ப 3 வருஷம் கொழும்புக்கு போனவுடனை எல்லாம் மறந்து போச்சே அங்காலை வெறும் வளவுதான் ஒருதரும் பாக்கமாட்டினம் போய் குளியும்

(சுமதி குளிக்கப் போக முகத்தாரிடம் வருகிற பொண்ணம்மா)

பொண்ணம்மா: இஞ்சரப்பா இண்டைக்கு நீங்க விறாந்தேல்ல படுங்கோ என்ன

முகத்தார்: ஏனப்பா என்ன நடந்தது?

பொண்ணம்மா: ஒரு அறைக்கை நானும் சுமதியும் படுக்கிறம் மற்ற அறைக்கை ராசன் படுக்கட்டும் கலியாணம் முடியும் மட்டும் கண்ணுக்கை எண்ணெயை ஊத்திக் கொண்டிருக்கனுமப்பா மாணிக்கத்தாரா நானா எண்டு பாக்கிறன் பேசாமல் நான் சொல்லுறதைக் கேட்டு நீங்க வெளியிலை படுங்கோ என்ன

முகத்தார்: கடைசிலை படியிலை காவலுக்கு படுக்கிற நிலைக்கு என்னைக் கொண்டு வந்திட்டாய் சரி... சரி...



# தெருப்பயண ஞானம்

**- கோஸ்வா சிவ -**

நமது தெருக்களில் போகின்றபோது இடையில் சந்திக்கிற குறுக்கு வீதிகளின் பெயர்ப் பலகைகளைக் காண்கின்ற போதெல்லாம் கவிஞர் திக்வல்லை கமால அவர்களின் அழகிய கவிதை ஒன்றின் பொருள் நினைவுக்கு வரும். அந்தக் கவிதை வரிகளை மறந்துவிட்டபோதிலும் மனிதப் பண்பு பற்றிய அருமையான கவிதை மனத்தை நெருடும்.

சைக்கிளை நிறுத்திப் பூட்டுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தாம் அதனைப் பூட்டுவதற்காக மட்டும் தலைகுனியவில்லையாம். மனிதர்களிடமிருந்து அந்த வாகனத்தைப் பாதுகாக்கவேண்டி மனிதர்களே அதனைப் பூட்டிவைக்க வேண்டியிருக்கிறதே என்ற அந்த அவமான உணர்வுதான் அவரைத் தலைகுனிய வைக்கிறதாம்.

வீதிகளில் அவற்றின் பெயர்ப்பலகைகள் கம்பி வலைகளால் சிறைப்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கின்றபோது சிறையிடப்பட்டிருக்கும் குற்றவாளிகள் நாம்தான் என்ற எண்ணம் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது. அந்தக் கம்பிவலைகள் ஏன் போடப்படுகின்றன? நம்மவர்கள் அந்தப் பெயர்ப்பலகைகளின் மேல் விளப்பரங்களை ஒட்டுவார்கள்.

நகங்களால் கீறிக் கிழித்துப் பார்ப்பார்கள். நாம் இந்த நாகரிகமற்ற செயல்களைச் செய்யாமலிருப்பதற்காக நமது வரிப்பணத்தில் நாம் இதனைச் செய்ய வேண்டியிருக்கிறது. சிரிப்பாக இருக்கிறதா, தலையைச் சுற்றுகிறதா?

** ** ** ** ** ** **

வீதியில் போகும் போது கவனத்தையீர்க்கும் இன்னொரு விடயம், வீதியோரங்களில் பறிக்கப்பட்டிருக்கும் கல்லும் மணலும். தெருக்கரைக் குடியிருப்பாளர்கள் பலரின் தேசபக்தி வியப்பை ஏற்படுத்தும். நமது நாட்டை நமது வீடுபோல எண்ணி நாம் நடந்துகொள்ளவேண்டும் என நமது முன்னோர்கள் சிலர் சொன்ன புத்திமதியை அவர்கள் சிரமேற்கொண்டு வீதி முழுவதும் தமது வீடே எனக்கருதிப் பயன்படுத்துவார்கள். தமது வீட்டிற்கு முன்னுள்ள வீதிப்பரப்பு தமக்கே உரியது, என எல்லை வகுத்து உரிமை கொண்டாடுவார்கள் பலர்.

தமது வீட்டிற்குத் தேவையான கல், மணல் என்பவற்றைப் பறிப்பதற்கு இடம் இல்லாததால் அங்கே பறித்துவிட்டு அவசரமாக அதனைப் பயன்படுத்தி முடிப்பவர்கள் சிலர். இவர்கள் மன்னிப்புக்குரியவர்கள். ஆனால் பறித்த பொருட்கள் அரைவாசி வீதியை மூடியபடி அப்படியே இருக்க தமது அலுவல்களைப் பார்க்கப்போய்விடுவோர் அநேகர். தார்போட்ட வீதி சீமெந்து குழைக்க வசதி

என அங்கு தாராளமாக அதனைச் செய்வோர் அங்கு சிரமத்துடன் வாகனமோட்டுவோரைக் கண்டு மன்னிப்புக் கேட்கும் சிந்தனையோ, குற்ற உணர்வோடு இல்லாமல் "ஏன்காணும் எனது பாதையில் வந்தீர்?" என்ற பாவனையில் முறைத்துப் பார்ப்பவர்கள் சிலரும் உள்ளனர்.

** ** ** ** ** ** **

**இத்தகைய வீதிகளில் வாகனங்களை லாகவமாக ஓட்டிக்கொண்டு பயணம் செய்வதற்குத்** தனியான திறமை வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் லைசென்ஸ் வழங்கவேண்டும். 'எட்டு' ப்போடுவதில் அப்படி என்னதான் திறமை இருக்கிறதோ தெரியாது. எட்டுப் போட்டுப் பழகிய இளைஞர்கள் பலர் லைசென்சை எடுத்துக்கொண்டு வாகனங்கள் நிறைந்த தெருவிலே எங்கே சிறிது இடைவெளி கிடைக்கிறதோ அதற்குள் நுழைந்து முடியுமானால் 90 பாகையில் தன்னும் ஹாண்டிலை வளைத்து நிமிர்த்தி வாகனத்தை ஓட்டிக்கொண்டு (இடப்புறம், வலப்புறம் என்ற விதிமுறைகளோ, வேக நியதிகளோ இவர்களிடம் பேசக் கூடாத விடயங்கள்) தமது திறமையைத் தாமே மெச்சியபடி ஒடித் தப்பிவிடுகிறார்கள். இவர்களுடைய அபார திறமையைத் தாங்க முடியாமல் குறுக்கே வரும் பலர் தடுமாறி விழுந்துவிடுவதும் நெஞ்சு வலி வந்து தவிப்பதும் வேறு விடயம். ஆனால், கொஞ்சம் 'அரைப் பழசா' கிவிட்ட பலர் பரீட்சைகளில் சித்திபெற்று வீதி ஒழுங்குகளை நன்கு தெரிந்துகொண்டு மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்ற மனிதப் பண்பாட்டுணர்வுடனும் தமது வயதுக்குரிய அவதானத்துடனும் வாகனம் செலுத்தும் பலர் எட்டுப் போடும் சர்க்கஸ் வித்தை ஒன்றை மட்டும் தெரியாத காரணத்தால் லைசென்சைப் பெறமுடியாதவர்களாகப் பெருமூச்சு விடுகிறார்கள். உரிய அதிகாரிகள் மனம் வைத்து, சிறிது அறிவுரீதியாகச் சிந்தித்து இந்த 'எட்டு' ப்போடுகிற மாயவித்தையை மாற்றக்கூடாதா? எட்டு என்பது பொல்லாத இலக்கமல்லவா?

** ** ** ** ** ** **

சைக்கிளோட்டும் வாண்டுப்பயல்கள் பலரை வீதியில் காணும்போது வயிற்றைக் கலக்குகிறது. ஐந்து வயதுக் குழந்தையை கரியரில் ஏற்றிக்கொண்டு ஏழு வயதுச் சிறுமி சைக்கிளோட்டுவது சர்க்கஸ் வேடிக்கை காட்டவா அல்லது கின்னஸ் புத்தக சாதனைக்காக என்பது புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம். நம் நாட்டில் நிறையப் பேர் பல லட்சம் ரூபாய்களைச் செலவிட்டு உடலும் மனமும் மிகவும் நொந்து வருந்தி அந்நிய தேசம் சென்று நவீன சிகிச்சைகள் மூலம் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு வரும் செய்தி இந்தத் தெருச்சாதனை புரியும் பிள்ளைகளின் பெற்றோருக்குத் தெரியாத ஒன்று.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது பேசாமல் இவர்களுக்கெல்லாம் லைசென்ஸ் கொடுப்பதை நிறுத்திவிட்டுப் பாதசாரிகளுக்குப் பயிற்சிகள் வழங்கி லைசென்ஸ் வழங்கும் முறையைக் கொண்டுவரலாம்போலிருக்கிறது. ■



# மட்டக்களப்பின் பொக்கிஷங்கள்

*D. ஷெறின் நிஷாந்தி*

## 1. வண்ணாத்துப் பூச்சி சமாதானப் பூங்கா

கிழக்கிலங்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் உறவினைப் புதுப்பித்தல், இவர்களை உடல் உள ரீதியாக குணம் செய்தல் இதுவே வண்ணத்துப்பூச்சியின் பூங்காவாகும். இப்பூங்காவானது தமிழ், முஸ்லிம், இந்து, கிறிஸ்தவ சமூகங்களைச் சேர்ந்த அனைவரையும் ஒன்றாகக் கை சேர்க்கச் செய்து அடுத்த தலைமுறையினருக்கான சமாதானத்தை போஷிக்கச் செய்கின்றது.

இப்பூங்கா குழந்தைகளுக்காக 1996ம் ஆண்டு புரட்டாதித் திங்களில் முதன்முதலாக திறந்து வைக்கப்பட்டது. மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிக்குப் பின்னால் அமைந்துள்ள இப்பூங்கா நிபுணத்துவம் வாய்ந்த மட்டக்களப்பு உள இயல் வளத்துறை நிலையத்தின் துணை அம்சமாகும்.

## 2. மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி

மட்டக்களப்பிலிருந்து 1கி.மீ தூரத்தில் மஞ்சள் தொடுவாய் எனும் இடத்தில் அமைந்துள்ள இக்கல்லூரியில் 1983ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அரசசார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் தச்சு, மேசன் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்தது. 1994 ல் தேசிய என். சி. ஈ. முழுநேரப் பயிற்சியும் கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டன. தொழில் சார் கற்கை நெறிக்குரிய கட்டிடங்கள். நிர்வாகக் கட்டிடத் தொகுதி என்பன அமைக்கப்பட்டு தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து தனியான கொடுப்பனவு அலகு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தன. இத் தொழில்நுட்பக் கல்லூரியின் மூலம் தற்போது கிட்டத்தட்ட 30 பயிற்சிப் பாட நெறிகள் நடைபெற்று வருகின்றன. தொழில் இன்றி இருக்கும் மாணவர்களுக்கும், படிப்பை முடித்து விட்டு வெளியேறும் மாணவர்களுக்கும் தொழில் வழிகாட்டல் மூலம் தொழிலைப் பெற்றுக் கொடுக்க இத் தொழில்நுட்பக் கல்லூரி உதவுகின்றது.

## 3. தரிசனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள முக்கியமான இடங்களில் நாம் மிக முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது விழிப்புலனற்றோர் பாடசாலையான தரிசனமாகும். 1992 ல் யாழ்ப்பாணத்தில் படித்துக் கொண்டிருந்த திரு. இதயராஜன் எனும் விழிப்புலனற்ற ஒருவராலேயே இது உருவாக்கப்பட்டது. இதன் நோக்கம் விழிப்புலனற்ற மாணவர்களையும் "பிறைல்" எழுத்துக்கள் மூலம் கல்வி பயிலவைப்பதன் மூலம் கண்பார்வை அற்றோரையும் சமுதாயத்தில் பிரஜையாக மாற்றுதலாகும்.

## 4. சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாந்தரின் நாமத்தில் ஒளிரும் இந்த இசை நடனக் கல்லூரி மட்டக்களப்பின் அழகுக் கோயிலாக மிளிர்கின்றது. இது 1982 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இக்கல்லூரி பல மாணவர்களை இசை, நடனத் துறையில் கலைஞர்களாக உருவாக்கியுள்ளதை யாரும் மறக்க முடியாது.

## 5.கல்லடிப் பாலம்

இது மட்டக்களப்பிலுள்ள மிகவும் பிரசித்தி வாய்ந்த ஓர் பாலமாகும். இது கட்டப்படுவதற்கு முன்பு மட்டக்களப்பு நகரத்திற்கும் கல்லடிக்குமிடையில் ஆற்றைக் கடப்பதற்கு ஒரு படகுச் சேவை இருந்தது. பூரண இரவு வேளைகளில் இப்பாலத்தின் கீழ் மீன்களின் பாடும் ஒலி கேட்பதாகக் கூறுகின்றனர். இதனால் மட்டக்களப்பை "மீன் பாடும் தேனாடு" எனறும் அழைப்பதுண்டு. ஒரு போதும் வற்றாத வருடம் முழுவதும் ஓடும் இந்த நீர் உப்பு நீராக இருப்பதுடன் இதிலிருந்து பல வகை மீன்களும், இறால்களும் மனித தேவைகளுக்காகப் பிடிக்கப்படுகின்றன. இது போர்த்துக்கேயரால் 1783ல் கட்டப்பட்டது. ■



# அகராதிகள் ஆக்கத்தில் கந்தரோடை ந. சி. கந்தையாவின் பங்கு

கலாபூஷணம் க. துரைசிங்கம்

தமிழில் அகராதி முறை ஐரோப்பிய நாட்டவர்களின் ஆதிக்கத்தின் காரணமாக வந்ததாகச் சிலர் கருதுகிறார்கள். ஆனால் இம்முறையை ஒத்ததாகவே தமிழில் நிகண்டு வந்திருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அகராதி என்பது எதையும் அகர வரிசைப்படுத்தித் தொகுப்பதாகும். தமிழில் முதலில் தொகுக்கப்பட்டது சதுர அகராதியாகும். அதனைத் தொடர்ந்து கையகராதி என்னும் யாழ்ப்பாண அகராதியை 1842 ஆம் ஆண்டு உடுவிலைச் சேர்ந்த சந்திரசேகரப் பண்டிதர் ஆக்கினார். இது மானிப்பாய் மிசனரிமாரால் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து உடுப்பிட்டியைச் சேர்ந்த ஓய்வுநிலை நீதிபதி கு. கதிர்வேற்பிள்ளை தமிழ் சொல்லகராதி என்னும் நூலை வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து மேலைப்புலோலி நா. கதிர்வேற்பிள்ளை தமிழ் அகராதியை வெளியிட்டார். இதே காலத்தவரான சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரும் இலக்கியச்சொல் அகராதியை வெளியிட்டார்.

இதன் பின்னரே இலங்கை கந்தரோடையைச் சேர்ந்த ந. சி. கந்தையா ஐந்து அகராதிகளை வெளியிட்டு அகராதி வெளியீட்டில் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தினார். ந.சி. கந்தையாபிள்ளை பற்றி சிறிது அறிந்துகொண்ட பின்னர் இவரின் அகராதி முயற்சி பற்றி ஆராய்வோம்.

இவர் சுன்னாகம் கந்தரோடையில் நன்னித்தம்பி சின்னத்தம்பிக்கு மகனாக 1893ஆம் ஆண்டு பிறந்தார். இவர் கல்வியை கந்தரோடையில் கற்று உயர் வகுப்புகளில் சித்தியடைந்து கந்தரோடையில் உள்ள பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். ஆங்கில அறிவுடன் தமிழ்ப்புலமையும் பெற்ற இவர் நவாலியூர் இரத்தினம்மாவை திருமணம் செய்தார். இவரை நவாலியூர் இலக்கிய



சோமசுந்தரப்புலவர் பண்டிதர் என்றே குறிப்பிடுகிறார். பின் ஆசிரியத் தொழிலை விடுத்து மலேசியா சென்று அங்கு புகையிரதப் பகுதியில் பணியாற்றினார்.

காலப்போக்கில் இந்தியாவுக்கு வந்த இவர், அறுபத்தாறு பழந்தமிழ் நூல்களை எல்லோரும் புரியும் வண்ணம் ஆக்கினார். இவற்றுள்ளே 1950 ஆண்டு தொடக்கம் 1960ஆம் ஆண்டு வரை 14 நூல்களை ஆக்கித்தந்துள்ளார். இவற்றில் ஐந்து நூல்கள் அகராதிகள் ஆகும். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்ற ந.சி. கந்தையாபிள்ளை அவர்கள் செந்தமிழ் அகராதி, தமிழ் இலக்கிய அகராதி, தமிழ்ப்புலவர் அகராதி, காலக்குறிப்பு அகராதி, திருக்குறள் அகராதி, ஆகிய நூல்களை ஆக்கினார்.

நான் ஏன் அகராதிகளை எழுத முற்பட்டேன் என்பதற்கு ந.சி.க. சொல்லும் காரணங்களைப் பார்ப்போம் "முன்பு வந்த அகராதிகள் பெரிய அளவிலானவை, கடும் பதங்களை உள்ளடக்கியவை, விலையும் அதிகம். புலவர்களுக்கும் பல்கலை மாணவர்களுக்கும் மட்டும் புரியக்கூடியவை. எனவேதான் நடுத்தர அறிவுடையோர்களுக்கும் பாமரர்களுக்கும் புரியும் வண்ணம் அகராதிகளைத் தயாரித்தேன்" என்று சொல்கிறார்.

## செந்தமிழ் அகராதி

இதனை மேலோட்டமாக நோக்கின் 672 பக்கங்களைக் கொண்டது. இதில் 648 பக்கங்களில் அ தொடக்கம் வெளவுதல் வரையான சொற்கள் வருகின்றன.

இவற்றினைவிட மரங்கள், பறவைகள், புல்வகைகள், கிரகங்கள் பற்றிய சொற்களின் விளக்கங்களும் வருகின்றன. பலரும் பயன்பெறும் வண்ணம் இது அமைந்தது காலத்தின் தேவையே எனலாம்.

## தமிழ் இலக்கிய அகராதி

இந்நூலை ந.சி.க ஆக்குவதற்குமுன் வழிகாட்டிகளாக , இட்டும் தொட்டும் டாக்டர் பார்நட் லண்டன் அருங்காட்சியக நூலகத்தில் தொகுத்ததும், 1865இல் யோன் மூர்டொச்சின் நூல் தொகுப்பும், சென்னை பொதுநூலக நூல் தொகுப்பும் துணை நிற்கின்றன.

மேற்கூறிய ஆக்கங்களை அடிப்படையாகக்கொண்டே தமிழ்

அகராதியை ந.சி.க. எழுதியுள்ளார். இந்த நூலில் அகத்தியர் தொடக்கம் வைத்தியநாத தேசிகர் வரையானோர் எழுதிய நூல்கள், அவற்றின் காலம், பதிப்பித்தோர், தொகுத்தோர் போன்ற தகவல்களைத் தந்துள்ளார். உதாரணத்துக்கு

நூல்: இராச வைத்தியம், ஆசிரியர் தேரையர், பதிப்பித்தவர் முகம்மது அப்துல்லா, 1907 ஆம் ஆண்டு என வருகிறது.

**தமிழ் இலக்கிய அகராதி**

183 பக்கங்களைக் கொண்ட நூலாகும். இந் நூல் தமிழ் மொழியியல், இலக்கிய இயல் இலக்கண இயல் எனப் பரந்துபட்டதொன்றாகும். இந்நூலினை ஆக்கித் தந்த கந்தையாபிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

"இதுவரை அச்சிடப்பட்ட தமிழ்ப்புலவர் வரலாறுகள், சென்னை அரசாங்க நூல் நிலையக் கையெழுத்துப் பிரதிகள், சரஸ்வதி மகால் நூல் நிலையக் கையெழுத்துப்பிரதிகள், இவை சம்பந்தமாக வந்த குறிப்புக்களையும் வேறு நூல்களையும் துணைகொண்டு தமிழ் புலவர் அகராதி என்னும் இந்நூலைத் தொகுத்துள்ளோம் '' எனக் குறிப்பிடுகிறார்.

209 பக்கங்களைக்கொண்ட இந்த நூலில் அகத்தியர் தொடக்கம் வேலாயுதக்கவிராயர் வரையான புலவர்களின் விபரங்கள் அடங்குகின்றன. குறிப்பாகக் கூறின் புலவர் பெயர், காலம், நூல்கள், காலம் என்பன அடங்குகின்றன.

**காலக்குறிப்பு அகராதி**

தமிழ் அறிஞர் ந.சி.க. வின் இக்காலக்குறிப்பு அகராதியைப் பலரும் பாராட்டுகிறார்கள். அந்த வகையில் இந்த அகராதி நூலுக்கு அணிந்துரை வழங்கிய சென்னைப் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசான் மா. இராசமாணிக்கம் பின்வருமாறு கூறுகிறார்.

> "நாட்டு நிகழ்ச்சிகள், நாடாண்ட மன்னர் பெயர்கள், சமுதாயத்தை நல்வழிப்படுத்திய புலவர்கள் பெயர்கள் நம் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதன. இத்தகைய அரிய செய்திகளைத் தொகுத்துக் கூறும் இந்நூலை அறிவுக்களஞ்சியம் என்று சொல்லலாம். எடுத்தவுடன் ஒரு அரசர் காலத் தையோ ஒரு நிகழ்ச்சியின் காலத்தையோ அறிவதற்கு இதுபோன்ற தொகுப்புநூல் இதுவரை தமிழில் வெளிவரவில்லை. இதனை வெளியிட்டுள்ள பெருமை இலங்கை நாட்டு அறிஞர் ந.சி. கந்தையாபிள்ளைக்கே உரித்தாகும்"

எனக் குறிப்பிட்டுள்ளார்.



**திருக்குறள் அகராதி**

இது ஒரு நூல் பற்றிய அகராதியாகும். மற்றைய அகராதிகள் பல நூல்கள் பற்றியும் பல புலவர்கள் பற்றியும் உருவாக்கப்பட்டவைகளாகும்.

கந்தையா அவர்கள் திருக்குறள் அகராதி எழுதுவதற்கு முன்பு அகராதி தொடர்பான சில முயற்சிகள் வந்திருக்கின்றன. குறிப்பாகச் சொன்னால் மார்க்கசகாயம் என்பவர் திருக்குறள் சொற்குறிப்பு அகராதி என்று வெளியிட்டார். திருக்குறள் நூலை உரையுடன் வெளியிடுபவர்கள்கூட நூலின் இறுதியில் அருஞ்சொற்களுக்கு அகவரிசையில் பொருள் கூறியும் உள்ளனர். 1952இல் சாமி வேலாயுதம் என்பவர்திருக்குறள் சொல்லடை என்ற நூலையும் எழுதியுள்ளார். இவற்றையெல்லாம் உள்வாங்கி முழுமை பெற்றதாக ஆய்ந்து திருக்குறள் அகராதியை 1961ஆம் ஆண்டு ந.சி.க. வெளியிட்டுள்ளார்.

திருக்குறளைச் சந்தேகம் இன்றி புரிந்துகொள்ளவதற்காக இந்நூலை தந்துள்ளார். இந்நூலில் அ தொடக்கம் வையார் வரையான சொற்களுக்கு பொருள்கண்டுள்ளார். 114 பக்கங்களைக் கொண்ட இந்த அகராதி திருக்குறளை பூரணமாக அறிவதற்குத் துணை நூலாக அமைந்ததெனலாம். ஐந்து அகராதிகள் உட்பட இவரின் 66 நூல்களை மீள்பதிப்புச் செய்த தமிழ்மண் பதிப்பகத்தாருக்கு நன்றியுடையோம்.

> அகராதி ஆக்கங்கள் பற்றி ந.சி.க அவர்கள் குறிப்பிடுகையில் "பல நூல்களை ஆராய்ந்து பல நாட்கள் சிரமப்பட்டு இப்படியான நூல்களை ஆக்க வேண்டும். அப்படி ஆக்கினாலும் உரிய சன்மானம் கிடைக்காததினால் போலும் அறிஞர்கள் இம் முயற்சியில் ஈடுபடுவது குறைவாகும்"

என்று சொல்கிறார். இலங்கையில் அதிகம் பேசப்படாத ந.சி.கந்தையாபிள்ளை தமிழ் பேசும் உலக நாடுகளிலெல்லாம் மதிக்கப்படுகிறார்; பேசப்படுகின்றார் என்று இலங்கை அறிஞர்கள் அங்கலாய்க்கிறார்கள். இவர் 74 வயதில் 1967 இல் இலங்கையில் காலமானார். 66 நூல்களைத் தந்த இலங்கையர் என்ற பெருமைக்குரியவர் இவர். அதுவும் ஐந்து அகராதிகளைத் தந்து இலங்கைக்கும் கந்தரோடைக்கும் பெருமை சேர்த்த இவரை யாரும் மறக்க இயலாது; இவர் புகழ் என்றும் நிலைக்கும். ■

அகவரிகள்

## "சுன்னாகம் குறித்த இடப்பெயர் ஆய்வு" கட்டுரை

'நம்பி' / இணை - ஆசிரியர்கள் / ஆசிரியர் குழு
'வெள்ளிமலை' சஞ்சிகை,
பொது நூலகம்,
சுன்னாகம்.

தங்களது கட்டுரையை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நன்றிகள் பல. தங்களது கட்டுரையைப் படித்த நான், சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். தமிழ் பேசும் சமூகமானது அதனை 'மெய்ப்பொருள்' காண்பதில் தீவிரமாக ஈடுபடுத்தாது போனால், அது மேன்மையான, பாதுகாப்பான, இன்பமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளமுடியாத நிலைதான் தொடரும் என்ற கருத்தினடிப்படையில் தான் இங்கு சிலவற்றைக் கூற முற்படுகிறேன்.

இந்தநிலையில், இங்கு கூறப்படுபவைகளை 'வெள்ளிமலை' இணையாசிரியர்களுடனும், ஆசிரியர் குழுவினருடனும் மாத்திரம் வாதிக்காது, யாழ் குடா நாட்டின் 'கற்றோர்கள்' எனக் கருதப்படும் பிறருடனும் வாதிப்பீர்கள் என நம்புகிறேன். இதுவே, 'மெய்பொருள்' காண்பதில் அனைவரையும் ஈடுபட வைக்கும் என்பது எனது கருத்து.

தங்களது கட்டுரையானது 'சுன்னாகம்' என்ற இடப்பெயர் பற்றியவொரு ஆய்வாகவே அதில் எழுதப்பட்டுள்ளவைகள் வலியுறுத்துகின்றன.

ஆனால், இங்கொரு அடிப்படைப் பிரச்சினை எழுகிறது.

தாங்கள் 'சுன்னாகம்' எனக் குறிப்பிடும் கிராமத்தின் பெயர் 'சுன்னாகம்' தான் என்பதை எப்படி உறுதிப்படுத்தினீர்கள்? அதன் பெயர் 'சுண்ணாகம்' அல்ல என்பதை எப்படி உறுதிப்படுத்தினீர்கள்? அது ஏன் 'சுண்ணாகம்' ஆக இருக்கமுடியாது என்பதற்குத் தங்களிடமுள்ள தருக்க ரீதியிலான நியாயங்கள் எவை?

நீங்கள் குறிப்பிட்ட இடத்தின் பெயர் 'சுண்ணாகம்' என்பதல்ல, அது 'சுன்னாகம்' தான் என்பதற்கான தருக்கரீதியிலான நியாயப்படுத்தல்களை எவரும் இதுவரையில் முன்வைத்து இருந்ததாகத் தெரியவில்லை.

குறிப்பிட்ட கிராமத்தின் பெயர் 'சுன்னாகம்' என்பதா, அல்லது 'சுண்ணாகம்' என்பதா என்பதைச் சரியாக அறிவதாயின், இவ்விரண்டு சொற்றொடர்களும் பொருள்களைக் (meanings) கொண்டுள்ளனவா, இல்லையா என்பதை ஆராய்ந்தறிந்து, பொருள்களைக் கொண்டிருந்தால் எந்தப் பொருள் அக்கிராமத்தின் இயற்கையுடனோ, அல்லது பண்டைக் காலத்தில் அங்கு வாழ்ந்த மக்களது தன்மையுடனோ ஒன்றுகிறது என்பதைப் பார்ப்பதூடாகவே அறியமுடியும்.

இந்தநிலையில், நாம் அறியவேண்டிய முதல் விடயம் என்னவெனில், 'சுன்னாகம்', 'சுனனாகம்' என்பவைகளின் 'பொருள்கள்' எவை என்பதே.

இங்குதான் எமது முன்னைய பண்டிதர்களும், இன்றைய பேராசிரியர்களும், ஆய்வாளர்களும் எதிர்நோக்கிய, எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினை முன்வருகிறது. 'சுன்னாகம்'. 'சுண்ணாகம்' என்ற சொற்றொடர்களுக்குப் 'பொருள்கள்'



உள்ளனவா, இல்லையா என்பதை எப்படிச் சரியாக அறிவது?

இங்கு நாம் ஒரு மிகமுக்கிய கேள்வியை எழுப்பவேண்டியுள்ளது. அது என்னவென்றால், தமிழ் எழுத்து மொழியில் சொல் பொருள் உணர்த்தக் காரணம் உள்ளதா, இல்லையா என்பதும், அது பொருள் உணர்த்தக் காரணம் இருக்கிறதாயின், அக்காரணம் என்ன என்பதுமாகும். இங்கு நாம், குறிப்பிட்டவொரு சொல் பொருளுணர்த்தக் காரணம் அச்சொல்லிலேயே முழுமையாகத் தங்கியுள்ளதா, அல்லது அது சொல்லில் தங்கியில்லாது பிறவற்றில் தங்கியுள்ளதா என்பதை அறியவேண்டியுள்ளது. குறிப்பிட்டவொரு சொல்லானது பொருள் உணர்த்துவதற்கான காரணம் அச்சொல்லிலேயே முழுமையாகத் தங்கியில்லாது பிறவற்றில் மாத்திரம்தான் தங்கியிருக்குமேயாயின், அச்சொல் 'இடுகுறி' யாகிவிடும். அதாவது, Conventional ஆகிவிடும்.

ஒரு சொல் இடுகுறியாயின், அச்சொல்லுக்கான பொருள் விளக்கத்தினைக் கொடுப்பது, உண்மையில், விளக்கத்தினைக் கொடுப்பவரது வல்லமைகளுக்கு ஏற்றவகையில் அமையும் சிறு சிறு மர்மக் கதைகளாகத்தான் இருக்கமுடியுமேயன்றி, அது தருக்க ரீதியிலான ஆய்வின் அடிப்படையிலானதாக இருக்கமுடியாது. இப்படியான நிலையில், இடப்பெயர் ஆய்வு என்பது, நேரப்போக்காகவே இருக்கும்.

ஆனால், சொல் பொருள் உணர்த்தக் காரணம் அச்சொல்லிலேயே இருக்குமேயாயின், இடப்பெயரை ஆராய்ந்து, அதற்குச் சரியான பொருளை அறியமுடியும்.

இந்தநிலையில், எமக்கு எழும் மிக முக்கிய கேள்வி என்னவென்றால், தமிழ் எழுத்து மொழியில் சொல் இடுகுறியா, அல்லது காரணமா என்பதும், அது 'காரணம்' எனின் அக்காரணம் என்ன என்பதுமாகும்.

இதைச் சரியாக அறிவதாயின், சொல் பொருள் உணர்த்துவது தொடர்பாக எமது இலக்கண நூல்கள் எவற்றைக் கூறியுள்ளன என்பதை நாம் சரியாக அறியவேண்டும்.

ஆனால், துரதிஷ்டமானது என்ன வெனில், எமது முன்னைய பண்டிதர்களும், வித்துவான்களும், இன்றைய பேராசிரியர்களும், ஆய்வாளர்களும், எமது இலக்கண நூல்கள் சொல் பொருள் உணர்த்துவது பற்றி • என்ன கூறியுள்ளன. என்பதைச் சரியாக விளங்கிக்கொள்ள முடியாதவர்களாக இருந்தமையும், இன்று இருப்பமையுமாகும்.

எனது சிற்றறிவுக்கு எட்டியவரையில், தொல்காப்பியம் என்ற இலக்கண நூலே,. தமிழ் மொழியில் சொல் பொருள் உணர்த்துவது பற்றிப் பேசியுள்ளது.

அங்கும், அது, மிகவும் எளிய முறையில் "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" எனவும், "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்றும், "மரபு நிலை திரியின் (பொருள்) பிறிதுபிறிதாகும்" என்றும் குறிப்பிட்டுள்ளது.

தொல்காப்பியன் "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" எனக் கூறியிருந்ததையும், அதற்கு நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், சேனாவரையர் என்போர் கொடுத்திருந்த விளக்கங்களையும் சரியாக விளங்கிக்கொள்ள முடியாத நிலையில் இருந்த, இருக்கும் பண்டிதர்களும், வித்துவான்களும், பேராசிரியர்களும், மொழியியலாளர்களும், ஒருபுறத்தில், தமிழ் எழுத்து மொழியில் 'சொல் இடுகுறி'

என்கின்றனர். மற்றொரு சாரார், சொல் பொருளுணர்த்தக் காரணம் உண்டென்று கூறி, பண்டைய உரையாசிரியர்கள் கொடுத்த விளக்கத்திலிருந்தும், மொழியினைத் தருக்க ரீதியாக ஆராய்ந்து வரக்கூடிய முடிவிலிருந்தும் வேறுபடும் விளக்கங்களைத் தமது நூல்களில் கொடுத்துள்ளனர்.

ஒரு சொல் பொருளுணர்தக் காரணம் உண்டாயின், அக்காரணமானது அந்தச் சொல்லின் மூலத்தனியொலிகளில்தான், அதாவது, அந்தச் சொல்லினை உருவாக்கிய ஒலியன்களில்தான் தங்கியிருக்கமுடியும். இந்நிலையில், சொல் பொருள் உணர்த்தக் காரணம் உள்ளதாயின், இந்த மூலத்தனியொலிகள் ஒவ்வொன்றும் தன்மை அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட விபரிப்பினைச் செய்யவும் வேண்டும்; ஓர் சொல்லில் உள்ள மூலத்தனியொலிகளின் இணைவினால் உருவாகும் தன்மையடிப்படையிலான ஒட்டுமொத்த விபரிப்பானது, ஒரு முழுமையான விபரிப்பாக இருந்து, அவ்விபரிப்பானது நாம் வாழும் நிலப்பிராந்தியத்தில் காணப்படும் சில பொருட்களில் அடையாளங்காணக்கூடியதாக இருந்து, அப்படி அடையாளங் காணப்பட்டவைகள் தான் அச்சொல்லின் பொருள்கள் ஆக இருக்க முடியும்.

இந்தநிலையில், மூலத்தனியொலிகள் ஒவ்வொன்றும் செய்யும் தன்மையடிப்படையிலான விபரிப்பினை நாம் ஆராய்ந்தறிந்தோமேயானால், தமிழ் எழுத்து மொழியில் சொல் எப்படிப் பொருள் உணர்த்துகிறது என்பதைச் சரியாக அறிந்து, சுன்னாகம், சுண்ணாகம் என்பவைகளுக்குப் பொருள்கள் உள்ளனவா, இல்லையா என்பதைச் சரியாக அறிந்து, இவற்றுள் எது சரியான சொல் என்பதையும் அறிந்து, அக்குறிப்பிட்ட இடத்திற்கு அப்பெயர் ஏன் வந்தது என்பதையும் சரியாக அறியமுடியும்.

இதிலிருந்து, தாங்கள் ஆராய்ந்த கிராமத்தின் பெயரானது அக்கிராமத்தின் இயற்கையை ஒன்றி உருவாக்கப்பட்டதா, அல்லது அக்கிராமத்தில் அன்று வாழ்ந்து வந்த மக்களின் தன்மை அடிப்படையில் உருவாக்கப்பட்டதா என்பதைச் சரியாக அறியமுடியும்.

இந்தநிலையில், தாங்கள் ஆராய்ந்த கிராமத்தின் இயற்கை நிலையானது பிற கிராமங்களது இயற்கை நிலையிலும் எப்படியான விசேடமான முறையில் வேறுபட்டுள்ளது, என்பதை ஆராயவேண்டியுள்ளது.

மறுபுறத்தில், அதன் பெயரினூடாக பண்டைக்காலத்தில் அக்கிராமத்தில் வாழ்ந்தவர்களது தன்மை எப்படியானது என்பதையும் அறியவேண்டியுள்ளது. இங்குதான் அவர்கள் என்ன சமய போதனையைப் பின்பற்றி எப்படி வாழ்ந்தார்கள் என்பது முக்கியமாகிறது.

தாங்களும், ஏனையோரும், தமிழ் எழுத்து மொழி பொருள் உணர்த்தும் காரணத்தை ஆராய்ந்தறிந்தீர்களாயின், 'சுன்னாகம்' என்பது, 'மேன்மை உயிர்ப்பு வெளிப்படுத்துகை கொண்டிருக்கும் கிராமம்' எனவும்; 'சுன்னாகம்' என்பது, 'மேன்மை உள் உயிர்ப்புக் கொண்டிருக்கும் கிராமம்' எனவும் அறிவீர்கள்.

இவற்றுள் முதலாவது பெயர் ஒளிமயமான கிராமம், வெண்மையான கிராமம், அறக்கிராமம் எனவெல்லாம் வரும். இரண்டாவது காமக் கிராமம் என்றும் வரும். தமிழ் மொழியில் 'சுன்.....' என ஆரம்பிக்கும் சொற்கள் மிகமிகக் குறைவு.



ஒட்டுமொத்தத்தில், இக்கிராமமானது பௌத்த கிராமமாக இருந்த காரணத்தினால் தான் அதனது பெயரைப்பெற்றிருக்கவேண்டும்.இந்தநிலையில், இக் கிராமத்தினைச் 'சுண்ணாகம்' என எழுதுவதே பொருத்தமானது, சரியானதும் கூட.

எதுவிதத்திலும், சுண்ணாகம், உடுவில், கந்தரோடை என்ற கிராமங்களில், பௌத்த தொல்பொருட்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. கண்டறியப்பட்டுள்ளன.

இந்தநிலையில், இப்பகுதிகள் எல்லாம். தேரவாத பௌத்த சிங்களவர்கள் வாழ்ந்த பகுதிகள்தான் எனச் சிங்கள தேரவாத பௌத்த தீவிரவாதிகள் கோர முற்படமுடியும். இதன் ஓர் அங்கமே, கந்தரோடைத் தொல்பொருள் மையத்தில் இராணுவம் நிரந்தரமாக நிறுத்தப்பட்டமையாகும். சேந்தாங்குளம், மற்றும் இடங்களில் பௌத்த விகாரைகள் அண்மையில் கட்டடப்பட்டமையுமாகும்.

ஆனால், சிங்கள தேரவாத பௌத்த தீவிரவாதிகளது முடிவு முற்றிலும் பிழையானது, ஆதாரபூர்வமற்றது.

தமிழர்கள் பண்டைக் காலத்தில் மஹாயான பௌத்தர்களாகவே இருந்துள்ளனர். இதனை யாழ்குடா, இலங்கையின் வட பெருநிலப்பரப்பு, என்பவைகளில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் மட்பாண்டச் சிதைவுகள், ஆனைக்கோட்டை முத்திரை, மற்றும் அனைத்துத் தொல்பொருட்களும்; தமிழக, இலங்கைத் தமிழ் இலக்கியங்களும், நூல்களும், தமிழகத்தின் தொல் பொருட்களும் அசைக்கமுடியாத படி உறுதிப்படுத்துகின்றன. தேரவாத பௌத்தமானது புத்தபெருமானும் பௌத்தமும் அடையாளப்படுத்தப் படுவதையும், புராணங்கள், இலக்கியங்கள், இசை, நாட்டியம், கலைகள் என்பவைகளையும் நிராகரிக்கும் கொள்கையுடையது.

துரதிஷ்டவசமாக, பேராசிரியர்களும், அறிஞர்களும், ஆய்வாளர்களும் தமிழ் இலக்கியங்கள், நூல்களையும், எமது பிராந்தியங்களிலும், தென்னிலங்கையிலும் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களையும் விஞ்ஞான ரீதியாக ஆராயாத நிலையில்தான் இருந்துவந்து உள்ளனர். இன்றும் உள்ளனர். இதனால், சிங்கள தேரவாத பௌத்த தீவிரவாதிகளது கற்பனை உரிமைகோரல்களை ஆதாரபூர்வமாக நிராகரிக்க முடியாத அறிவியலில் பேடிகளாகவே இருந்து வந்துள்ளனர். இன்றும் இருக்கின்றனர்.

அவர்கள் தமிழ் மொழியின் மொழிப்பொருட் காரணத்தை ஆராயந்தறிய முடியாத நிலையிலும், அடையாளப்படுத்துகையை (Symbolization) விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தறிய முடியாத நிலையிலும்; புத்தபெருமானையும், பௌத்தத்தினையும் எப்படி அடையாளப்படுத்த முடியும் என்பதை ஆராய்ந்தறிய முடியாத நிலையிலும், இலக்கியங்கள், தொல்பொருட்கள், கலைகள் பற்றிய ஆய்வுகளைப் பிழையாகவும், கற்பனையாகவும் செய்து, தமிழ் பேசும் சமூகத்தினைக் கற்பனாவாத்தினுள் வீழ்த்திவிட்டனர்.

இந்தநிலையில், எமது வருங்காலச் சமூகத்தினை மெய்பொருளைக் கண்டறிவதையே முழுமுதல் நோக்கமாகக் கொண்டவொரு சமூகமாக உருவாக்குவதே, இன்றையோரின் முழுமுதற் கொள்கையாக இருக்கவேண்டும். அதுவே, எமது சமூகத்தின் மேன்மையான, பாதுகாப்பான, இன்பமான வாழ்க்கைக்கு வழியமைக்கும். அதைச் 'சுன்னாகம்' இடப்பெயர் ஆய்வூடாக ஆரம்பிப்போமா?

அன்புடன்

வெள்ளிமலை வாசகனொருவன்



# தற்காலச் சிறுவர் நிலை

ய. தரணிகா
யா/இராமநாதன் கல்லூரி

பதினெட்டு வயதுக்குட்பட்ட ஒவ்வொரு பிள்ளைகளையும் சிறுவர்கள் எனலாம்.

"இன்றைய சிறுவர்களே
நாளைய தலைவர்கள்"

இங்கு நாளைய தலைவர்களாக இன்றைய சிறுவர்களையே கணிக்கப் படுகின்றனர். இன்றைய விஞ்ஞான உலகில் சுமார் 250 கோடி சிறுவர்கள் தீர்க்கப்படாத பிரச்சினைகள் வேதனைகளைச் சுமந்தபடி வாழ்ந்து வருகின்றார்கள். குறிப்பாக யாழ். மாவட்டத்தில் கடந்த 20 வருட காலமாக இடம்பெற்ற ஓயாத கொடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்கள் ஆவார்கள். இன்று போர் தான் ஓய்ந்தது. ஆனால் இன்று வரை சிறுவர்களின் போராட்டம் ஓயவில்லை.

எங்கு பார்த்தாலும் சிறுவர்களை இம்சித்தல், வேலைக்கு அமர்த்துதல், கடுமையான தண்டனைகளை வழங்குதல் கல்வி உரிமையை மறுத்தல் போன்ற செயல்களால் சிறுவர்களைத் துன்புறுத்தி வருகின்றார்கள். எனவே இவ் இழிவான செயல்கள் தடுக்கப்பட வேண்டும். நாளைய இளம் தலைவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். எனவே சிறுவர்களின் நலனில் அக்கறை கொள்ளக் கூடிய வகையில் பெற்றோர்கள் ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தினரும் கரிசனையுடன் செயற்பட்டு நவீன விஞ்ஞான உலகுடன் சிறுவர்களைச் சங்கமிக்கச் செய்வோம்.



வாழ்க சிறுவர்கள்
வளர்க சிறுவர்கள் தம் உரிமைகள்



# நாடக விமர்சனம்

அருள்குமரன்

கலைப்படைப்புக்கள் மனிதர்களது வாழ்வு பற்றியும் அவர்களது புரிதல்கள், ஏக்கங்கள், கனவுகள், கற்பனைகள் எனப்பல்வேறு விடயங்களினைப் புலப்படுத்திநிற்கும். நாடகீய படைப்புக்களானவை தன் இயங்கியலை இன்றுவரை நீட்சித்து செல்வதற்கான காரணமாக அதன் நேரடி உயிர்ப்பு விசையினைக் குறிப்பிடலாம். "இவ்வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 10.09.09 அன்று வெறு வெளி அரங்கக்குழுவினால் நாடகமும் அரங்கக்கலைகளும் 15ம் அணி மாணவர்களின் தயாரிப்பில் நிகழ்த்தப்பட்ட ஏழு நாடகங்கள் தொடர்பான கருத்துப்பகிர்வினைப் பார்ப்போம்."

பரிதாபம், சுத்துமாத்து, நெறிப்படு, பரிகாரம், சகிர்தயம், தவிப்பு, வேர் எனும் நாடகீய படைப்புக்களை எழுத்துருவாக்கத்துடன் நெறியாள்கையினை அ. அஜிந்தன், சு. தமயந்தி, வ. கிருஷ்ணகுமார், பொ. சிவராஜசிவம், த. சந்திரா, ச. நிதர்சன், க. ரமணண் எனும் மாணவ படைப்பாளிகள் படைத்துள்ளனர்.

எமது வாழ்வியல் நீரோட்டத்தில் துன்பச் சிலுவையினைச் சதா சுமந்துகொண்டு கண்ணீருக்குள் வாழ்வினைத் தொலைத்துவிட்டு ஏதிலிகளாக உள்ள மக்களது வாழ்வுப் பரிமாணத்தில் சிரிப்பு விதையினைத் தூவுதவதற்கு இச்சிறு நாடகங்கள் முயன்ற போதிலும் சோகங்களும் இழையோடிகளாக இணைந்து செல்கின்றன.

பரிதாபம் நாடகமானது யதார்த்தத்தினை ஊடறுத்த வகையில் கதையமைப்புக் காணப்படுகின்றது. இதன் கதையாக தந்தை [தேநீர்க்கடை உரிமையாளர்] வெளிநாட்டில் உள்ள மகன் மீது நம்பிக்கை கொண்டு திருமண அலுவல்களினை மேற்கொள்கிறார். மாறாக மகன் வெள்ளைக்காரியினை திருமணம் புரிந்து விட்டதாக தந்தைக்குத் தொலைபேசியில் அறிவிக்கிறான். அவ்வேளை தந்தை மிகவும் மனமுடைந்து உறவு பற்றிய புரிதலில் நம்பிக்கையீனம் கொள்வதாக அமைகின்றது. இந் நாடகத்தில் நடிப்பியல் சார்ந்து நோக்கும்போது முதலாளியாக நடித்தவருடைய நடிப்பு யதார்த்தத்துடன் இணைந்து செல்வதுடன் தரகராக பாகமாடியவர் இணை கொடுத்து நடித்துள்ளார். அசைவியல் (Movement) சார்ந்தும் சிறப்பாக உள்ளது. மாறாக முடிவுறு கதையோட்டத்துடன் ஒட்டுறவாததாகவும்

விளங்குகின்றது. தொழிலாளி முதலாளியுடன் நடந்துகொண்ட முறை, முதலாளி தொழிலாளியுடன் நடந்துகொண்ட முறை என்பவற்றை குறிப்பிடலாம். எனினும் சில குறைபாடுகளை தவிர்த்து நோக்கும்போது இப்படைப்பின் நெறியாளர் பாராட்டுக்குரியவரே.

நம்பிக்கையின் ஏமாற்றத்தினை கதையாடல் வெளியாக்கியுள்ளது. "சுத்துமாத்து" எனும் நாடகம் அப்பாவித்தனமாக இருத்தல் ஏமாளியாக்கிவிடும் என்பதை / உறவுகளை உணர்வுபூர்வமாக நேசித்தல் என்பது ஏமாளியாக்கிவிடுவார்களோ என்பதாக கதையமைக்கப்பட்டுள்ளது. கடன் வாங்கியவராக பாகமாடியவரின் நடிப்பு, விதானை பாத்திரம் ஏற்றவரின் நடிப்பு இயல்பியலாக இருந்தது. தொலைத்தொடர்புநிலைய பெண்ணாக நடித்தவர் பாத்திரத்தினை உணர்ந்து நடித்துள்ளார். தொலைத்தொடர்பு நிலையங்களில் பணியாற்றும் பெண் எதிர்நோக்கும் பிரச்சினையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

"நெறிப்படு" எனும் நாடகமானது போதனை பண்புடன் வெளிப்படுகிறது. அநீதிக்கு அநீதி தீர்வல்ல என்பதனை உளம்சார் அணுகலாக விளக்குகின்றது.

"பரிகாரம்" எனும் நாடகம் எம் தேசத்தில் நடைமுறையில் நடந்தேறும் விடயங்களினைப் பேசி நிற்கின்றது. களவும் களவுதரும் வலியும் இதன் பேசுபொருளாகின்றன. நடிகர்களின் நடிப்பு சிறப்பானதாக இருந்தது. சில அதீத கற்பனைசார் புலப்படுத்தல் காட்சிகளில் இடம்பெற்றபோதும் சிறப்பானதாக அமைகின்றது.

"தவிப்பு" நாடகமானது சோகத்தின் இழையோட்டத்தின் ஊடாக கதை நகர்த்தப்படுகின்றது. இங்கே உறவு பற்றிய புரிதல் கேள்விக்குள்ளாகின்றது? தேவைகளும் அத்தேவைகளை நிறைவுபடுத்திக்கொள்வதற்கு மட்டுமே உறவுகளின் துணையும் இல்லாதபோது உறவுகள் உருவழிப்பு செய்வது சமூகத்தில் சில மனிதர்களது சிறப்பியல்பு என்பதனை கோடிட்டு காட்டியுள்ளது.

"சாகிர்தயம்" நாடகமானது அதீத யதார்த்த காட்சியமைப்பும் அதீத கற்பனை நடிப்புடனும் நகர்த்தப்படட்டுள்ளது. கணவன் மனைவியிடையே காணப்படுகின்ற சண்டையும் திடீர் கோபமாற்றலும் சினிமாதனமே தவிர வேறொன்றுமில்லை. ஆனால் இசையோட்டம் சிறப்பானதாக இருந்தது. இது



நாடகவோட்டத்தில் துணை நின்றது. மாறாக கதை தெளிவாக வழவமைக்கப்படவில்லை.

"வேர்" எமது வாழ்வியலில் வேர்களினை தேடுதல் என்பதும் அத்தேடலில் உள்ள தாகங்களும் அத்தாகத்தில் கலைஞர்களின் பாகமாடல்களும் முதன்மையான பங்கு வகிக்கின்றன. கலைஞன் என்பவன் காலத்தின் குறிகாட்டி, பிரதிநிதி அவன் வாழ்வியல் என்பது சமூகத்திற்காகவும் சமூகத்தினை ஊடறுத்து அமைவதாகவும் விளங்கும்.

இவ்வகையில் தனிமைக் கலைஞன் ஒருவரின் ஏக்கத்தினை படையல் ஆக்கியுள்ளார் இளம் படைப்பாளி. பழமைக்குள் புதுமுயற்சியாக வெளிக்கிளம்பியுள்ளது. இப்படைப்பு கலைஞர்களின் வலிநிறைந்த வாழ்வுகளிற்கு மருந்திடும் ஒத்தடங்கள் நினைவுகள் என்பதாக அமைகின்றது.

மனிதர்கள் நிராகரித்தாலும், காலங்கள் நிராகரித்தாலும் அவனது நினைவுகள் நிராகரியாது என்பதாகப் படைக்கப்பட்ட காட்சி சிறப்பானதாக உள்ளது. மாறாக சில குழப்பங்கள் ஏற்பட்டன. அதாவது இக்கலைஞன் பெண் பாகமாடி யா? ஆண் பாகமாடியா? எத்துறையில் தேர்ச்சிபெற்ற கலைஞன் என்பன ஐயுறு வினாக்களாக பார்வையாளர் மனதில் மேற்கிளம்பியது. எனினும் வித்தியாசமான படையலாக உள்ளது. எமது மரபுகளை தேடுகிறோம் எனும் போர்வையில் மறைந்துபோன எத்தனையோ கலைஞர்களின் வாழ்வில் இங்கே ஒரு கலைஞனின் தனிமையும், உறவுகளால் தவிக்கவிடப்பட்ட அவனது வலியினையும் புடம்போட்டு காட்டியமை பாராட்டுக்குரியது. மேலும் யார் நிராகரித்தாலும் அதிகாரவர்க்கத்தினால் சாகடிக்கப்பட்டாலும் அவன் சாதித்தவற்றையும் அவனது நினைவுகளையும் எவனாலும் அழிக்க முடியாது என்பதனை இப்படையல் எடுத்துக்காட்டி நிற்கின்றது. இந் நாடக பாகமாடிகளின் நடிப்பு சிறப்பானதாக இருந்தது. எமது மரபுசார் இசைக்கருவிகளான பறை, சங்கு, மணி போன்றன பயன்படுத்தப்பட்டமை சிறப்புக்குரியது.

ஏழு நாடகங்களும் வேறுபட்டதும் புதிய சிந்தனையுடனும் புதிய கருத்து நிலையுடனும் உருவாக்கப்பட்டுள்ளது.

■

# பன்னுதமிழ் சொன்னமன்னாகத்தான் சுன்னாகப் பண்டிதன் முருகேசன்

## மயிலணிச் சிலேடை வெண்பா

சி. ரமேஷ்

மணற்றி என்றும் மணற்றிடல் என்றும் பூர்வநாமம் பெற்று விளங்கும் யாழ்ப்பாணத்தின் நடுநாயகமாக விளங்கும் பகுதி சுன்னாகம் ஆகும். வெள்ளிமலை, வெள்ளியங்கிரி, ரஜதகிரி, ரஜதாசலம் என அழைக்கப்படும், சுன்னாகத்தில் வீறுசால் சான்றோரால் தமிழும் சமயமும் ஒருங்கே வளர்க்கப்பட்ட புனிதநகராக விளங்குவது மயிலணி என்னுமிடமாகும். மயில் அணி செய்த இடம் மயிலணி எனப்படும். அதாவது "சூரபத்மனைக் கொன்ற பாபம் நீங்கிட முருகப்பெருமானால் இவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பெற்ற சிவாலயத்தில் இறைவனின் திரு நடனக்காட்சியைக் கண்ட அவரின் வாகனமாகிய மயில் தோகை விரித்தாடி முருகனையும் அவரின் தந்தை சிவனையும் துதி செய்து அணி செய்தது. இதனைக் கண்ணுற்ற முருகன் மகிழ்வுடன் மயிலை நோக்கி உனது பெயரால் இவ்விடம் மயிலணி என வழங்கப்படும் என்று ஆசீர்வதித்தார். அன்று தொட்டு இன்று வரை இவ்விடம் அவர்வாக்குக்கமைய மயிலணி என்ற காரணப்பெயர் கொண்டே அழைக்கப்படுகிறது."

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சமயச்சான்றோர் இவ்விடத்தில் ஆலயங்களை நிறுவி அதனையொட்டி சைவக்குருக்கள் மடங்களையும் ஸ்தாபித்தனர். அது மாத்திரமன்றி இக்காலப்பகுதியில் கோயில் களுக்கருகாமையில் வேதாகமங்களைக் கற்றுத் தேறிய பிராமணோத்தமரைக் குடியேற்றிக் கோயிற்பூசை, திருவிழாக்கள் முதலியவற்றையுச் சிறப்பாகச் செய்தனர். எனவே இதன் மூலம் சைவசமயம் மறுமலர்ச்சி அடைந்தமையோடு சைவசமயப் பாரம்பரியமும் தளிர்த்து வேரூன்றலாயிற்று, சமயத்தை வளர்க்க முனைந்தமையைப் போன்று அவ்வளவே தமிழையும், இவ்விடத்தே வளர்க்கத் தலைப்பட்ட ஆன்றோர் ஒரு புதிய பாடசாலையொன்றினையும் நிறுவினர். சுவாமிநாத தேசிகர், நமசிவாயதேசிகர், முத்துக்குமாரகவிராயர்,



முருகேசபண்டிதர், சங்கரப்பண்டிதர் முதலியோர் இப்பாடசாலையி லிருந்து கல்வி புகட்டினர். இதன் பயனாக சி.வை. தாமோதரம்பிள்ளை, மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, ஊரெழு சு. சரவணமுத்துப் புலவர், குமாரசுவாமிப்புலவர், கீரிமலை கா. சபாபதிக்குருக்கள் முதலானோர் இப்பாடசாலையில் கல்வி கற்று ஈழத்தில் சிறந்த தமிழ்ப் புலமையாளராக விளங்கினார்கள். இத்தகைய பேறுபெற்றவர் வாழும் மயிலணியை "மாணிக்க மேடையினும் வண்புலவோர் நாவினுமே வாணி வந்தோங்கு மயிலணி "என்றும்" மெய்ஞான்றும் வண்டிசை பாடு மயிலணி" என்றும் முருகேச பண்டிதர் சிறப்பித்துப் பாடுகிறார்.

1877 இல் ஏழாலை சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் நிறுவப்பெற்ற தமிழ் வித்தியாசாலையில் முருகேச பண்டிதர் தலைமையாசிரியராகப் பதவி வகித்த காலத்தில் "மயிலணிச் சிலேடை வெண்பாவை" இயற்றினார் என கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை கூறுவார். இந்நூல் காப்பு நீங்கலாக இருபத்தியொரு பாடல்களால் ஆனது. ஆயினும்

"வெற்றிவடிவேல் முருகன் மேவு மயிலணியைப்
பற்றிச்சிலேடை வெண் பாநூறு – சொற்றிடவே"

என்னும் காப்புச் செய்யுள் கொண்டு நோக்குமிடத்து இந்நூல் நூறு பாடல்களால் பாடப்பட்டிருக்க வேண்டும், என்பதை அறிய முடிகின்றது. குடந்தை வெண்பா போன்று முன்னிரு பாடல் அடிகளும் மயிலணியின் சிறப்பைப் பாட வெண்பாவின் ஈற்றடிகளிரண்டும் மடக்கு அணி அமையுமாறு பாடப்பட்டுள்ளது. ஆழ்ந்த பொருட் புலப்பாடு வெளிப்படும் வண்ணம் பாடப்பட்ட மயிலணிச் சிலேடை வெண்பா அக்கால மயிலணி மக்களின் வாழ்வியற் கோலங்களையும் ஓரளவுக்குப் படம் பிடித்துக்காட்டுகின்றது.

மயிலணிச் சிலேடை வெண்பாவில் முருகப்பெருமானின் பெருமை பல்வேறிடங்களில் எடுத்துரைக்கப்படுகிறது. முருகப் பெருமான் உறைகின்ற மயிலணியை "வரைக் கந்த மாதனத்து வந்தார் மனை" என்னும் பாடலடிக்கூடாக எடுத்துரைக்கும் முருகேச பண்டிதர் தன்னை நாடி வரும் அடியவருக்கு அருள் பாலிக்கும் கந்த பெருமானை

"தொண்டர்கள் போய் ஆறக் கரத்தா னமைத்தங் கவர்கருளும் ஆறக்கரத்தானகம்" என்னும் பாடலடி கொண்டு காட்சிப்படுத்துவார். "காங்கேயர்" என்றும் "மாறன்" என்றும் முருகப்பெருமானை விளித்துப் பாடும் புலவர்

"…….முத்தும்
பழனிமலையார் பயந்தருளும் வேற்கைப்
பழனி மலையார் பதி"

என்னும் பாடலில் மயிலணியை முருகப்பெருமான் உறையும் பழனிமலையாகவே உருவகிக்கிறார். அத்துடன் மயிலணி வேதனையால் வெஞ்சிறையில் வாடி நலியும் தொண்டர்களின் வீடு பேற்றுக்குரிய இடமாகவும் போற்றப்படுகின்றது. முருகப்பெருமான் சூரபத்மனின் ஆணவமலத்தை நீக்கி அவனை ஆட் கொண்டதை "மாசுறு சூர் அங்காங் கெடுத்தார்" என்னும் வரியில் காட்சிப்படுத்தும் புலவர், குமரக்கடவுளின் இல்லக்கிழத்தி வள்ளியைக் காணக் கிழ வேடம் தாங்கி வந்ததை "அரிவை வள்ளி காணவுரு அங்கம் கெடுத்தார்" என்னும் பாடலடி கொண்டும் காட்சிப்படுத்துவார். முருகப்பெருமானின் துணைவியான வள்ளியும் முருகப்பெருமானைப் போன்று பலவேறிடங்களில் சிறப்பிக்கப்படுகிறாள். வள்ளியை "வேடிச்சி" என விளித்துப்பாடும் பண்டிதர் திருமுருகன் வள்ளிக்காக குறமேறிய கதையை "வேட்டுவரை மேவினார் மெல்லியலாம் வள்ளி தனை வேட்டுவரை மேவினார்." என்னும் பாடலடி கொண்டு எடுத்துரைக்கிறார்.

முருகக் கடவுளின் இச்சா சக்தியாக வள்ளியைப் பாடிய முருகேசபண்டிதர் அவர்தம் ஞானாசக்தியாகிய வேலையும் சிறப்பித்துப் பாடுகிறார். சூரபத்மனை முருகப்பெருமான் வேலினால் சங்கரித்த நிகழ்வை "நஞ்சஞ்ச வைத்தானை வேலினால் மல்குசரந் தண்ணெனச் செய் வேலினால் வாழ்வு" எனப் பாடிச் சிறப்பிக்கிறார்.

இயற்கை வளம் கொண்டு எழில் பொங்கும் மயிலணியின் சிறப்புக்கள் பல்வேறு பாடல்களில் மிக எளிமையாக எடுத்துரைக்கப்படுகிறன. வயல் வளம் கொண்டு நலம் பயக்கும் மயிலணி



"போய்க்கழனி வித்துநரும் போரரசருஞ் செவியின் வாய்க்கவிதை நாடு" எனப் புலவரால் போற்றப்படுகிறது. இதனைப் போன்று மயிலணியின் நீர்வளம் "ஊற்றார் புனற்றடமு மூர்ப்புறஞ் சேருங்கடமும் வாற்றா மறைசேர் மயிலணி எனவும் முருகேசபண்டிதரால் எடுத்துரைக்கப்படுகிறது. கம்பராமாயணத்தில் "தண்டலை மயில்களாட தாமரை விளக்கம் தாங்க" என நகர்ப்புறம் சிறப்பிக்கப்பட்டதைப் போன்று தண்டலை பொன்னின் தளியும் தவமதுவார் வண்டுறக்கம் காட்டும்" என மயிலணிக் கிராமமும் முருகேசபண்டிதரால் போற்றிப் புகழ்ந்துரைக்கப்படுகிறது. எழில்மிகு இயற்கையைப் பாடிய புலவர் அவ்வியற்கைக்கு அரண் செய்யுமிடமாக விளங்கும் ஆலயத்தை "விண்டலஞ்சேர் கோபுரமும் மெய்யோ கருமேக மண்டலந் தாங்கு மயிலணி எனக்கூறி உவந்தேத்துகிறார். இவ்வாலயத்துக்குச் சென்று பக்தர்கள் பாடிப்பரவும் காட்சியும் புலவரால் எடுத்துரைக்கப்படுகிறது. கலைஞானம் கொண்டு வேணுவால் ஆக்குவித்த மயிலணி என்னும் பதியில் மெய்யன்போடு மெய்யுற வழிபடும் அடியவர்க்கு மேனிலை பெற்றோங்கும் வாழ்வினை அருள்பவனாகிய இறைவனைப் போற்றிப்பாடும் முருகேசபண்டிதர் அவன் ஆன்மாக்களுக்கு விருப்பு வெறுப்பின்றி நின்மலனாகவிருந்து அருள்பாலிக்கும் தன்மையினையும் பாடுகிறார். "போற்றாதவருக் கினியான் தமிழ் முனிவ னாதியமா தவருக் கினியான் தவம்" என்னும் பண்டிதரின் பாடலடி இறைவனின் திருவருட் பேற்றை உலகுக்கு எடுத்துரைக்கிறது. அதாவது "இறைவன் தன்னை போற்றித் துதிக்காதவருக்கும் இனியவனாக விளங்குபவன்; அதே சமயம் தன்னை நாடித் துதிப்பவருக்கு துதித்தலின் நிலை பேறாக விளங்குபவன்; அவ்விறைவனே தோற்றமும் முனிவுமில்லா ஆதியாகவும் சிறப்பிக்கப்படுபவன்" என்னும் இறையின் உண்மைத்துவம் இப்பாடலடியில் மிக அருமையாக வெளிப்படுத்தப்படுகிறது. இப்பாடலடியின் ஆதார சுருதியாக "நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன் சலமிலன் பேர் சங்கரன்"என்னும் திருவருட்பயன் கூற்றே விளங்குகிறது எனலாம்.

ஆலயமகோற்சவம் ஐந்தொழில்களின் நிலைகளனாக விளங்குவது. அதிலும் தேரோற்சவம் இறைவனின் அழித்தல் தொழிலை அடியவருக்குச் நினைவூட்டி நிற்பது. அழித்தல் என்பது நிலைத்து நிற்கும்

தனு, கரண, புவன, போகங்களை அவை தோற்றுவதற்கு முதற்காரணமாயிருந்த மாயையில் மீண்டும் ஒடுங்கும் படி செய்தல். இதனை முருகேச பண்டிதரின் "ஆகமத்தில் வந்துகைக்குந் தேரார் மடிந்தருளப் பாகனென வந்துகைக்குந் தேரார்மனை" எனப்பாடும் முருகேச பண்டிதர் தேரூரச்சிறப்பு பெறும் ஆலயத்தின் தெய்வீகச் சிறப்பினை "கோகனப் பூமேலும் கோவேந்தர் வீதியிலும் வாகனங்களேறு மயிலணி" எனச் சிறப்பிக்கிறார். சிலேடைத்தன்மையில் பாடப்பட்ட இப்பாடலுக்கு தாமரையிலும் அரசருக்கு அரசரான இறைவனுடைய வீதிகளிலும் அன்னங்கள் ஏறியுறைகின்ற பதியான மயிலணியில் வாயுதேவன் தேரைச் செலுத்தும் இறைவன் எழுந்தருளியுள்ளார். அவரடியினை போர்க்களத்துப் பகைவர்கள் கூடப் பகை நீங்கிப் பற்றுவர்" எனப் பிறிதொரு விதமாகவும் பொருள் கொள்ளலாம். இரட்டுற மொழிதல் என்னும் சிலேடை வெண்பா அணிக்கூடாகப் பாடப்பட்ட இவ் மயிலணிச் சிலேடை வெண்பா உரைக்க உரைக்கப் பற்பொருட் பெறுமானமுடைய புதிய புதிய கருத்துக்கள் தோன்றும் வண்ணம் பாடப்பட்டுள்ளது. கல்லாதவருக்கன்றி கற்றோர் மட்டுமே பொருள் கண்டு விதந்தேத்துமாறு பாடப்பட்ட இச்சிலேடை வெண்பா முருகேச பண்டிதரின் வித்துவச் செருக்குக்கு அடிநாதமாக விளங்குகின்றது. சொல்நயமும் பொருள்நயமும் மிக்க மயிலணிச் சிலேடை வெண்பாவுக்கு உரையெழுதப் படுமானால் அது முருகேச பண்டிதரின் ஆழ்ந்த கவிப்புலமையை உலகறியச் செய்யும்.

முருகேச பண்டிதரின் வித்துவச் செருக்குக்கு பிறிதொரு சான்று இவரியற்றிய நடுவெழுத்தலங்காரம் ஆகும்.

மைந்தன் விதை மாமிகவர் வழிமீ னொன்று
மதனவேள் புறவிதழில் வேழின் மீது
வந்தநடு வெழுத்தெனக்குச் செய்தான் மற்றை
வரிகள்பதி னான்கினையுந் தானே கொண்டான்
அந்தநாள் வளைத்துச்சி தரித்துத் தம்மை
அருச்சிக்கு மவர்க்ககற்றி யங்கை யேந்தி
முந்தவதன் கீழிருந்து நடனஞ் செய்து
முனிந்துரித்தான் மயிலணிவாழ் முதல்வன் நானே.



இத்தனிநிலைச் செய்யுளில் நடுவெழுத்தால் கொள்ளப்பட்ட பொருள் தத்துவராமற் செய்தான் என்பது. நடுவெழுத்து எடுக்கும்படி கொள்ளப்பட்ட சொற்கள் "மைந்தன், விதை" முதலியவற்றாற் பெறப்பட்ட மதலை, வித்து மாதுலை, கவலை, ஆரால், காமன், புல்லி என்னும் ஏழு சொற்களும் ஆகும். இங்கு வரிகள் பதினான்கு என்றது நடுவெழுத்து நீங்கிய ஏனைய மற்றைய எழுத்துக்களையாகும். எனவே முருகேச பண்டிதரால் இயற்றப்பட்ட நடுவெழுத்தலங்காரம் ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றில் புதியபாடு பொருளுக்கு வித்திட்டது எனலாம். இதனைப் போலவே நாயக்கர் காலத்தில் பெருவழக்கில் கையாளப்பட்ட நிந்தாஸ்துதி விருத்தம், விரோத சிலேடை அணி, விடுகவி போன்ற பாவடிவங்களைக் கையாண்டு தம் தனிநிலைச் செய்யுட்களைப் பாடியுள்ளார்.


"வாழ்வருடெய்வமாய் வழுத்துமன்பன்
தெய்வப்புலவருந் தேனுறைதமிழென
வெவ்வெப்பனுவலு மினிதுடனிசைப்போன்
பாராறுநெடுந்தவப் பரசிவன் தொண்டர்கள்
சீரடியகத்தொடு சிரத்திலிருத்தினோன்
றலங்கினர் பதிதொறும்தழி1இ
யிலங்கிசைவளர்முரு கேசபண்டிதனே"

என உடுப்பிட்டி சிவசம்புப்புலவரால் சிறப்பிக்கப்படும் முருகேச பண்டிதரின் வயோதிப காலம் திருப்பாற்றூரிலே கழிந்தது. இவருக்கு வேண்டிய வசதிகளை இறுதிகாலத்தில் வெள்ளைய நாடாரவர்கள் செய்ததாக கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை கூறுவார். மூப்பால் உடல் தளர்ந்து மெலிந்த முருகேச பண்டிதர் 1900ம் ஆண்டு (விகாரி வருசம்) ஆவணி மாதம் 10 ஆம் திகதி தேகவியோகமாயினர். கூரிய நுண்மதி கொண்டு குறைவில்லா சீர்கள் பெற்று ஆரியமும் செந்தமிழும் இனிதே ஆய்ந்து அரிய நூல்கள் பலவுரைத்த முருகேச பண்டிதனுக்கு ஒப்பார் இவ்வுலகில் இல்லையெனலாம். எவ்விடமும் எக்காலமும் இவ்வினியார் புகழ் உள்ளவும் தமிழ் என்றும் இனிதும் நிலைத்திருக்கும்.

(முற்றும்)

## யன்னலில் மின்னல்

பெண் என்ற
விட்டில்
கண் என்ற
யன்னல் உண்டு - அந்த
யன்னல் வழியே - உயிரின்
மின்னல் உண்டு - அந்த
மின்னல் மொழியால் - சிலருக்கு
இன்னல் சேரும் - சிலருக்கு
இன்னல் தீரும்



யோ. விஜயயோசன் சில்வி

---

அன்னையை நேசிக்கிறேன்
அன்பு காட்டி எனை அரவணைப்பதற்காக
தந்தையை நேசிக்கிறேன்
தன்னை உருக்கி எம்மை வளர்ப்பதற்காக
அண்ணனை நேசிக்கிறேன்
பாசம் பரிவை புரிய வைப்பதற்காக
ஆசானை நேசிக்கிறேன்
அறிவினை நன்றாகப் புகட்டுவதற்காக
நண்பரை நேசிக்கிறேன்
நட்பெனும் உறவை நயக்க வைப்பதற்காக
பேனாவை நேசிக்கிறேன்.
என் உணர்வுகளை எழுத்தாக வடிப்பதற்காக

நே
சி
க்
கி
றே
ன்



ஜீவகன் - நிரோபா
யா/ இராமநாதன் கல்லூரி

---

## நம்பலம் அம்பலம்

நம்பலம் அம்பலம் என்பர்;
தெம்பெலாம் குறைந்து திகைத்திடும்
நாளில்;
வம்பெதற்கு? நம்புவோம்..............
வெந்துயர் நீங்கி வேதனை தீர்ந்து
வெளிச்சக் கதிர்கள் வரட்டுமே
வசந்தத்துடன்
வரவேற்போம்;
வாழ்வைத் தொலைத்து,

வாசக பாரதி



# உள்ளூராட்சி தேசிய மாநாடும் கண்காட்சியும் 2009.

*கொழும்பு, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் 2009 ஓகஸ்ட் 19,20.*

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் "நட்புமிகு நாடு வளமிகு நாளை" என்னும் மகுட வாசகத்துக்குக்கேற்ப, உள்ளூராட்சி தேசிய மாநாடும் அதனோடு இணைந்து உள்ளூராட்சிக் கண்காட்சியும் ஒகஸ்ட் மாதம் 19,20ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

வடமாகாண, யாழ்ப்பாண மாவட்டத்தின் உள்ளூராட்சி ஸ்தாபனங்கள் யுத்தம் காரணமாக இவ்வாறான தேசிய நிகழ்வுகளில் பங்குபற்றச் சந்தர்ப்பங்கள் அருகிக் காணப்பட்டன. யுத்தத்தின் பின்னரான நிலையில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களும் தமது பிரதேசங்களின் வளங்களையும் ஆக்கங்களையும் காட்சிப்படுத்த வாய்ப்பு இதன் மூலம் ஏற்பட்டது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் நூலகத்துக்கு நூலகத்தின் செயற்பாடுகளும் சேகரிப்புக்களும் என்னும் விடயத்தில் சேகரிப்புக்களைக் காட்சிப்படுத்துமாறு அழைப்புக் கிடைத்தது.



இதனடிப்படையில் சபை செயலாளர் தலைமையில் திருமதி.சுலோச்சனா முருகநேசன் அவர்கள் சன்னாகம் பொது நூலக நூலகர் திரு.க.சௌந்தரராஜன், தலைமைப்பீட முகாமைத்துவ உதவியாளர்கள் திரு. பா.டபரூபன், திரு.பா.குமணன் ஆகியோர் கொண்ட குழு கலந்து கொண்டது. நூலகத்தின் சேவைகளை **"தேச அபிவிருத்தியில் துணையாகும் நூலக சேவை"** என்னும் தலைப்பில் நூலக சேவைகளைப் பற்றியும் நூலகத்தின் சேகரிப்புக்களையும் காட்சிப்படுத்தப்பட்டது.

கண்காட்சியைத் திறந்து வைத்த உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஜானக பண்டார தென்னக்கோன் அவர்களும் குழுவினரும் எமது கண்காட்சி அறைக்கு விஜயம் செய்தனர். நூலக சேகரிப்பக்களைப் பார்வையிட்டு தமது அபிப்பிராயங்களைப் பதிவு செய்தனர்.



அவ்வாறே, வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ மேஜர் ஜெனரல் G.A. சந்திரசிறி அவர்களும் மாகாண பிரதம செயலாளர் திரு.ஆ.சிவசுவாமி அவர்களும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு.அமிர்தலிங்கம் அவர்களும் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் திரு.த.ஜோன்சன் அவர்களும் அமைச்சின் செயலாளர் திருமதி.விஜயலட்சுமி ரமேஷ் அவர்களும் மற்றும் அதிகாரிகளும் வருகை தந்தார்கள். ஏராளமான பொது மக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டார்கள்.





வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி சபைச் செயலாளர்களும் உத்தியோகத்தர் களும் விருதுடன் படத்தில் காணப்படுகின் றார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக அதிமேதகு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். வடமாகாணத்துக்கு 3ம் இடத்துக்கான பாராட்டும் விருதுகளும் வழங்கப்பட்டன.

## வடமாகாணம் உள்ளூராட்சி மாநாடு

### யா/மத்திய கல்லூரி.

### 2009 ஒக்ரோபர் 18,19.

தேசிய உள்ளூராட்சி மாநாட்டை ஒத்ததாக மாகாண மட்டத்திலும் உள்ளூராட்சி மாநாட்டை நடாத்துவதற்கான ஒழுங்குகளின் படி ஒக்ரோபர் மாதம் 18,19 திகதிகளில் யாழ்/மத்திய கல்லூரியில் வடமாகாண உள்ளூராட்சி மாநாடு சிறப்பாக நடாத்தப்பட்டது.

மாகாண உள்ளூராட்சி அமைச்சு, உள்ளூராட்சித் திணைக்களம், மாகாண உள்ளூராட்சி அமைப்புக்கள் இக் கண்காட்சியை ஒழுங்குபடுத்தின.

இக் கண்காட்சியிலும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தனது கண்காட்சிக் கூடத்தை சிறப்பாக நிறுவியிருந்தது. பிரதேச மட்டத்தில் உள்ளூராட்சி சபையின் செயற்பாடுகளை எடுத்துக் காட்டுவதாகவும் வடக்கின் வசந்தம் நிகழ்வுகளினூடாக பிரதேச அபிவிருத்திக்காக கையாளப்படும் உபாயங்கள் செயற்றிட்டங்கள் போன்றவற்றை எடுத்துக்காட்டும் விதமாக காட்சிக் கூடங்கள் அமைந்திருந்தன.



சுன்னாகம், உடுவில், ஏழாலை நூலகங்கள் இணைந்து நூலகப் பகுதியை காட்சிப்படுத்தின. இங்கும் பிரதம செயலாளர், அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் பிரதேச செயலாளர்கள் எனப் பலரும் வருகைதந்தனர். ஏசியா பவுண்ட்டேசன் அதிகாரிகளும் பலரும் வருகைதந்தனர். ஒரு பிரதேசத்தின் அனைத்து செயற்பாடுகளும் ஓரிடத்தில் கண்டறிய இக் கண்காட்சி உதவியாக அமைந்தது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு 2007, 2008 முகாமைத்துவப் போட்டிகளுக்கான விருதுகளும் சிறந்த கண்காட்சிக் கூடத்திற்கான விருதும் வழங்கப்பட்டன.



உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஜானக பண்டார தென்னக்கோன் அவர்களிடமிருந்து வலி. தெற்கு பிரதேசசபைச் செயலாளர் திருமதி. சுலோச்சனா முருகநேசன் விருது பெறுகின்றார்.



மாகாண கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் G.A. சந்திரசிறீ அவர்களிடமிருந்து வலி. தெற்கு பிரதேசசபைச் செயலாளர் திருமதி. சுலோச்சனா முருகநேசன் பாராட்டுப் பத்திரம் பெறுகின்றார்.



# சொக்கரி

## சிங்களப் பாரம்பரிய அரங்கு

S. T. குமரன்

### அறிமுகம்

சிங்கள அரங்கு இலங்கையில் வாழ்கின்ற பெரும்பான்மை இனக்குழுமத்தின் அரங்க வடிவமாகக் காணப்படுகின்றது. சிங்கள அரங்கு பற்றிய அறிமுகத்தை பேராசிரியர் சரத்சந்திரா Dr எ.ஜே.குணவர்த்தனா, Dr எம்.எச்.குணதிலக போன்றோர் உலகளாவிய ரீதியில் செய்துள்ளனர். இலங்கை இந்தியாவுக்கு அண்மையில் உள்ள காரணத்தினாலும் புத்தமத தொடர்பினாலும் இந்திய நாகரீகக் கலாச்சாரத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாகத் தென்னிந்தியக் கலாச்சாரப்பாதிப்பும் வட இந்தியக் கலைகளது பாதிப்பும் சிங்கள மக்களது பண்பாட்டில் மிகுதியாகக் கலந்துள்ளது.

சிங்கள அரங்கின் தொடக்கத்தை நாம் சிங்கள மக்களிடையே பரவலாகக் காணப்படுகின்ற சடங்குகளிலும் சமய நம்பிக்கை விழாக்களிலும் நாட்டார் சமய நம்பிக்கைகளிலும் பெறமுடியும். சிங்கள கிராமிய கலைவடிவங்களாக கோலம், சொக்கரி, நாடகம, நூர்த்தி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சிங்கள மக்களிடையே காணப்படும் கிராமியக்கலைகளுள் ஒன்றான சொக்கரி முழுக்க முழுக்க நாட்டாரிசையையும் நாட்டார் ஆடலையும் கொண்ட கலைவடிவம். இதில் முழுமையான கதையுண்டு. அரங்கத்தன்மை நிறையக் காணப்படுகின்றது. எனினும் சமயக்கரணங்களிலிருந்து முழுமையாக விடுபடாத தன்மையும் அவதானிக்கமுடிகிறது.

### பிரதேசங்கள்

இது பெரும்பாலும் கண்டிப்பிரதேசத்தையும் அதனை அடுத்த மலைப்பகுதிகளிலும் வன்னிப்பகுதிகளிலும் மட்டும் சிங்கள மக்களால் ஆடப்பட்டு வருகின்றது. லக்கல, கிங்கிராங்கட்ட, உட்கரதொனிய, கோவாகெட்ட, தளப்பத்தோயா, ஆகிய பிரதேசங்களில் சிறப்பாக ஆடப்படும். கரையோரப்பகுதிகளில் இந்நாடகம் ஆடப்படுவதில்லை. M.D.ராகவன் என்னும் ஆராய்ச்சியாளர் இக் கூத்து வடிவம் கின்னரய என்றழைக்கப்படும். ஒரு சாதியினரால் தான் ஆடப்படுகின்றதென்று கூறுவர். இச்சாதி மக்களிடையே பாய் இழைத்தல் முக்கிய தொழிலாகக் காணப்படுகின்றது.

### கதை

காசியைச் சேர்ந்த குருகாமி என்றழைக்கப்படும் ஆண்டி அழகில்லாததால் எந்தப் பெண்ணும் அவரை மணம் முடிக்க முன்வரவில்லை. இவன் மனமுருகி பத்தினி தெய்வத்தை வேண்ட இவருடைய தலையில் முடியொன்றை பத்தினித் தெய்வம் அணிய இவன் அழகாகின்றான். அவன் அழகுக்கு ஏற்ற சொக்கரி அம்மாவைத் மணம் முடிக்கின்றான். இவர்களுக்கு பச்சிமீர (பறையா) என்னும் அடிமை பணிபுரிந்து வருகின்றான். (பறையா என்பது அந்நியன்)

நிரந்தர தொழில் இல்லாததால் இலங்கை வந்து சிவனொளிபாதமலையை வழிபட்டு தம்பாவிட்டையில் குடியமர்கிறான். குருகாமியை நாய் கடிக்க அந்நாட்டு வைத்தியர் வைத்தியம் செய்ய அழைக்கப்படுகின்றார். வைத்தியருக்கும் சொக்கரிக்கும் இடையே நட்பு ஏற்படுகின்றது. ஒரு நாள் யாருக்கும் தெரியாமல் ஊரைவிட்டு ஓடி விடுகின்றாள். கவலை அடைந்த குருகாமி கதிர்காமக் கந்தனை வேண்ட கந்தன் சொக்கரி இருக்கும் இடத்தை கூற குருகாமி அங்கே சென்ற போது சொக்கரி ஒரு குழந்தையுடன் காணப்படுகிறாள். குருகாமியைக் கண்டு தவறை உணர்ந்து மன்னிப்பு கோர அவள் அவனையும் குழந்தையையும் அழைத்து வருகிறான். இதுவே சொக்கரியின் முக்கியமான கதை அம்சம்.

இருந்த போதிலும் இடத்துக்கு இடம் கதையமைப்பில் சிறுமாற்றம் காணப்படுகின்றது. குருகாமிக்கு நாய் கடிப்பதற்குப்பதிலாக பாம்பு தீண்டுவதாக சில கூத்திலும் குழந்தை வரம் வேண்டி சிவனொளிபாதமலை செல்வதாக சில இடத்திலும், குருகாமி வயது சென்றவராகவும் சொக்கரி இளமையாகவும் இருந்தால் பச்சிமீரா என்னும் வைத்தியருக்கும் சொக்கரிக்கும் இடையில் நட்பு உருவானதை கண்ட பச்சிமீரா சொக்கரியை வைத்தியம் செய்ய வந்த போது சொக்கரி வைத்தியருடன் கூடிச்சென்றதாகவும் சில இடங்களில் ஆடப்படும்.

### அரங்கு

சொக்கரியின் நாடகம் நடைபெறும் களத்தை நோக்கும் போது சொக்கரி ஆடப்படும் அரங்கம் மிக எளிமையானது. சூடு அடிக்கும் களமே சொக்கரி ஆடப்படும் களமாக கொள்ளப்படுகின்றது. வெறும் வெளியே அரங்காகப் பயன்படும் அடித்தளமான தரைப்பகுதியே இங்கு மேடையாகின்றது. வட்டக்களரி அமைப்பில் நடுவே கூத்து நடைபெறப் பார்வையாளர் நான்கு



புறமும் இருந்து இரசிப்பர். வட்டமான திறந்த வெளியில் பார்வையாளர்கள் நடிகர்கள் வருவதற்கு வழிவிட்டு அமர்ந்திருப்பர். மேடையோ திரைகளோ கிடையாது. அரங்கின் ஓரத்தில் தென்னங்குருத்தில் செய்யப்பட்ட கூடு ஒன்று பத்தினி வணக்கத்திற்கும் கதிர்காமக் கந்தன் வணக்கத்திற்கும் பயன்படுத்தப்படும்.

### ஒளி

முன்னர் பந்தம், பெற்றோல்மாக்ஸ், லாம்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒளியூட்டல் செய்த இவர்கள் இப்பொழுது மின் விளக்கையும் பயன்படுத்துகின்றனர். முழு இரவும் இக் கூத்து நடைபெறுவதால் ஒளியூட்டல் முக்கியப்படுகின்றது.

### இசை

சொக்கரியில் கண்டிப்பகுதியில் கடபேரி (கட்டபெற) எனப்படும் மத்தளமும் தாளமுமே முக்கிய வாத்தியங்களாக பயன்படுத்தப்படுகின்றது. வன்னிப்பகுதியில் உடுக்கு மத்தளத்திற்குப் பதிலாக பயன்படுத்தப்படுகின்றது.

### வேடமுகம்

சொக்கரி வேட முகப்பயன்பாட்டில் வைத்தியர், பறையா, சொத்தனா ஆகிய பாத்திரங்கள் வேடமுகங்களுடனேயே தோன்றுவதுண்டு. பறையா அணியும் வேடமுகம் மரத்தினாலும் ஏனையோர் அணிவன காட்போட் மட்டையாலும் செய்யப்படும்.

### வேடஉடை

வேட உடையில் வைத்தியர் வேட்டி அல்லது சாரமும் கோட்டும் அணிவர். தலையணை ஒன்றை முதுகில் கட்டி கூனலன் போல இவரைக்காட்டுவர். தொப்பை வயிறு உடையவராகக் காட்டப்படுவர். சொக்கரியும் காளியம்மாவும் கண்டிய பாணியில் (ஒசாரி) சேலையணிவர். பெரும்பாலான பாத்திரங்களை கோமாளிகளாகக் காட்டுதலே வழக்கம்.

### ஆற்றுகைப் படிமுறை

பிரதான பாத்திரத்தை ஏற்கும் குருகாமி பத்தினித் தெய்வத்தையும் கதிர்காமக் கந்தனையும் வணங்குவதுடன் கூத்து ஆரம்பமாகும். சொக்கரி பத்தினி வழிபாட்டுடனேயே தொடர்புடையது. புத்தமத வழிபாடு இக் கூத்தில் அருகியே காணப்படுகின்றது. குருகாமி சிவனொளிபாதமலைக்குச் சென்று புத்ததேவனின் புனித பாதத்தை வணங்குவதான காட்சி அண்மைக்காலத்திலேயே புகுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. எனினும் சிற்சில சிங்களக் கலைகளாகிய கோலம் தொவில்

முதலியவற்றில் காணப்படும். கரண அம்சங்களையும் சொக்கரியில் இடைக்கிடையே புகுத்திவிட்டனர். இச் சொக்கரி கதை சிங்கள மக்களிடையே வாய்மொழியாகவே வழக்கிலுள்ளது. இடத்திற்கு இடம் பல வேறுபாடுகளுடன் ஆடப்படுகின்றது. இதற்கான காரணம் இதன் வாய் மொழி அமைப்பேயாகும்.

சொக்கரியில் **போலச் செய்தல்** அல்லது **ஊமம்** முக்கிய இடம் பெறுகின்றது. குருகாமி, சொக்கரி, பறையா மூவரும் மரத்தை தறித்தல் ஆசாரியுடன் சேர்ந்து **தோணி செய்தல் பின்னர் கடலை கடத்தல், வீடு கடத்தல், வீட்டை மெழுகுதல், பாய் இழைத்தல்** என்பன யாவும் போலச் செய்தல் மூலமே நடித்துக் காட்டப்படுகின்றது.

**தமிழ் கூத்து ஒப்பீடு**

தமிழ் கூத்தில் காணப்படும் ஏட்டண்ணாவியார் மத்தள அண்ணாவியாரை இங்கு காணலாம். நடிகர் அரங்கில் தோன்றுவதற்கு முன்னர் அறிமுகம் செய்யப்படுவர்.

உ-ம்:- இதோ உங்கள் முன் நடனமிடப்போகும் பறையாவை அறிமுகம் செய்கின்றேன். அவன் தன்னை முழுவதும் பார்க்கின்றான். எங்கும் சுற்றி நோட்டம் விடுகின்றான். தேவையின்றிப் பிதற்றுகின்றான். சொக்கரி மீதும் அடிக்கடி கண்ணைச் செலுத்துகின்றான். இவ்வாறு அறிமுகம் செய்து ஏட்டண்ணாவியார் பாட மத்தள அண்ணாவியார் வாசிக்க பாடற்குழு (கோரஸ்) தாளம் போட்டு இசைக்க அதற்கேற்ப பாத்திரங்கள் ஆடுவதும் வழக்கம்.

இதன் பின்னரே பாத்திரங்கள் தமக்குள் உரையாடத் தொடங்கும். தனிப் பாத்திரமாக இருந்தால் மத்தள அண்ணாவியாருடன் அல்லது ஏட்டு அண்ணாவியருடன் உரையாடுவது வழக்கம்.

தோணி ஏறிக்கடலைத்தாண்டும் போது பாடப்படும் பாடல் இசை காத்தவராயன் கூத்தில் இடம் பெறும் இசையை ஒத்திருக்கிறது. சவலைப் பிடித்து தோணியை ஓட்டுவதாக குருகாமியும் பறையும் போலச் செய்தல் மூலம் காட்டுவர். தமிழ் கூத்துக்களில் குதிரை சவாரி செய்தல், கப்பல் ஓட்டுதல் என்பன எவ்வாறு மத்தளத்திற்கேற்ப ஆடிக்காட்டப்படுகின்றதோ அவ்வாறே இக்காட்சியும் நடித்து காட்டப்படுகின்றது. சொக்கரி குழந்தையை தாலாட்டுவது தமிழ் இசையை நினைவு படுத்துகின்றது.

காத்தவராயன் கூத்தில் ஆடப்படும் இலகுவான ஆட்டமரபே சொக்கரியில் சில பாத்திரங்களால் கையாளப்படுகின்றது. சொக்கரி மீண்டும் குருகாமியிடம் வந்ததும் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு பாடும் பாடல் சோகமயமான பாடல்கள் சில காத்தவராயன் கூத்து மெட்டில் அமைந்துள்ளன.



**சொக்கரி மகுடி**

சொக்கரியை ஒத்த கூத்து வடிவமாக மகிடிக்கூத்து தமிழரிடையே காணப்படுகின்றது. சொக்கரியில் ஆண்டிகுரு இந்தியாவிலிருந்து கடல் கடந்து வந்து பல கஷ்டங்களை எதிர்கொள்கின்றான். மகிடிக்கூத்தில் ஒண்டிப்புலி என்ற குறவர் தலை மகன் மலையாள தேசத்திலிருந்து கடல் கடந்து தன் மனைவி காமாட்சியுடனும் கூட்டத்தாருடனும் மட்டக்களப்புக்கு வந்து அங்குள்ள மந்திர வாதிகளுடன் பந்தயமிட்டு பல அநுபவங்களைப் பெற்று இறுதியில் வெற்றியடைகின்றான். மட்டக்களப்பு மந்திரவாதியாக ஒருபிராமணன் கற்பனை செய்யப்படுகின்றான். ஆண்டிக்குருவுக்கு ஒரு அசட்டு வேலையாள் இருப்பது போல பிராமணனுக்கும் ஒரு அசட்டு உதவியாள் அமைகின்றான். ஆண்டிக்குரு சொக்கரியில் பகிடி பண்ணப்படுவதைப்போல மகிடியிற் பிராமணன் பகிடி பண்ணப்படுகின்றான். சொக்கரி போல இதுவும் நாடக உணர்வும் அங்கதச்சுவையும் நிறைந்த நாடகம். சொக்கரியில் பார்வையாளர் பங்கு பெறுவதைப் போல இதிலும் பர்வையாளர் பங்கு பெறுகின்றனர். நிகழ்ச்சிகள் கிராம மக்களைப் பெரும் சிரிப்பில் ஆழ்த்துவதாய் உள்ளன. மட்டக்களப்பில் 3 வகையான மகிடிக் கூத்துக்கள் நிகழ்த்தப்படுகின்றன. இவற்றுள் இரண்டு வாய்மொழியாக வழங்கிவருபவை. நடாத்தும் முறையில் சொக்கரி போல இடத்துக்கு இடம் வேறுபடுபவை.

இக் கூத்து முழுவதும் கிண்டலும் கேலியும் நிறைந்து சில இடங்களில் அளவுக்கு மிஞ்சிய விரசம் காணப்படும். பறையா என்னும் பாத்திரம் வார்த்தையால் அன்றி அங்க அசைவுகளாலும் ஆபாசமாக நடந்து கொள்ளும். ஆயினும் பர்வையாளர் இவற்றை இரசிப்பர்.

**முடிவுரை**

சிங்கள மக்களிடையே பயில் நிலையில் உள்ள இவ் வடிவம் சிங்கள மக்களது கிராமிய வாழ்வோடு மிக நெருக்கமான தொடர்புடையது. இந் நாடகம் காளியம்மா வழிபாட்டுடன் தொடர்புடையது என பேராசிரியர் சரத்சந்திரா எம்.எச்.குணதிலகா போன்றோர் குறிப்பிடுகின்றனர். மற்றவர்கள் சிரிக்கக்கூடிய பகிடிக் கதைகளும், அங்கதச்சுவையும் இங்கு பயன்படுகிறது. கூடுதலாக பாலியலோடு தொடர்புடைய பகிடிக்கதைகள் இங்கே கூறப்படும். தம்புல்லவில் ஆடப்பட்ட சொக்கரியில் கண்டிய நடனம் கலந்து விட்டதாகவும் சொக்கரியில் காணப்படும் கூத்து மரபை மலினப்படுத்தி விட்டதாகவும் கலைஞர் தம்பையா கொட என்பவர் குறிப்பிடுகின்றார்.

**உசாத்துணை**


1. பாலசுகுமார், உலக அரங்க வரலாறு, அனாமிகா சவுத்ரசியன், 1996
2. மௌனகுரு.சி, பழையதும் புதியதும், விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு 1992
3. கலாநிதி காரைசுந்தரம்பிள்ளை சிங்கள பாரம்பரிய அரங்கு
4. மௌனகுரு.சி, சடங்கிலிருந்து நாடகம் வரை, யாழ்ப்பாணம், 1988
5. Sarathchandra.E.R, The Folk Drama of Ceylon, Colombo,1966


**அட்டைப்பட எழுத்தாளர் அறிமுகம்**

## திரு. கே. எஸ். ஆனந்தன் இணுவில்

"யாழ்ப்பாணக் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்ட காலத்தில் அக் கல்லூரியின் நூலகம் எனது இலக்கிய வளர்ச்சியின் கருவூலமாகத் திகழ்ந்தது." எனக்கூறிப் பெருமைப்படும் திரு.கே.எஸ்.ஆனந்தன் அவர்கள் ஆரம்பத்தில் ஆன்மீக ஆய்வுக் கட்டுரைகள், விஞ்ஞானக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள் எழுதிப் பல பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன.

1962ம் இவரது முதல் சிறுகதை வீரகேசரியில் பிரசுரமாகியது. 1964ம் ஆண்டில் முதல் நாவல் வெளியானது. தொடர்ந்து 23 நாவல்களை எழுதியுள்ளார். 9 நாவல்கள் நூலுருவில் வந்துள்ளன. இலங்கையின் சகல பத்திரிகைகளிலும் இவரது கதைகள் வெளியாகியுள்ளன. வீரகேசரி பிரசுரமாக வந்த 'தீக்குள் விரலை வைத்தால்' சிந்தாமணி பத்திரிகையில் வந்த 'இதயமலர்' என்பன பரந்த வாசகர்களை இவருக்குத் தேடித்தந்தன. தீக்குள் விரலை வைத்தால் இருதடவைகள் வீரகேசரி பிரசுரமாக வந்து 11 ஆயிரம் பிரதிகள் அக்காலத்திலேயே விற்பனையாகின.

'காலங்கள் மாறும்' நாவல் இந்தியாவின் மணிமேகலை பிரசுரமாக வெளிவந்துள்ளது. இன்னும் 5 நாவல்கள் வெளிவர்வுள்ளன. அவற்றில் இரண்டு வரலாற்று நவீனங்கள். இரண்டு சமூக நாவல்கள், ஒன்று சிறுவர் நவீனம்.

இவரெழுதிய நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள் இலங்கை, இந்திய சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. மேடை நாடகங்கள் பத்துவரை எழுதியுள்ளார்.

சமய இலக்கியத் துறையிலும் நல்ல வழிகாட்டுதல்களை இணுவில் சிவகாமியம்மன் ஆலயச் சூழலில் முன்னெடுத்து வருகின்றார்.

இவர் 2009 உலக புத்தக தினத்தில் வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் 'இலக்கியச் சுடர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இலக்கியத்துறையில் மேலும் பல சிறப்புக்களை இவர் பெற வெள்ளிமலை வாழ்த்துகின்றது.



# உங்களுக்குத் தகவலைப் பற்றித் தெரியுமா?

## பொது நூலகர்கள் தகவல்களை திறமையாகக் கையாளுகின்றார்களா?

**சுமன ஜெயசூரியா**

*(பிரிட்டிஷ் கவுன்சில் ஆதரவுடன் ஸ்ரீலங்கா நூலக சங்கம் நடாத்திய பயிற்சிப் பட்டறையில் 2001 மார்ச் 24ம் திகதி தொடக்கம் 26ம் திகதி வரை நடை பெற்ற கருத்தரங்கில் சமர்ப்பித்த கட்டுரை விஞ்ஞான தொழில்நுட்ப தகவல்களினுடாக சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஜீவனோபாய அபிவிருத்தி, தேசிய விஞ்ஞானமன்ற கருத்தரங்கு கட்டுரை வெளியீடு 2007 இலிருந்து நன்றியுடன் பிரசுரிக்கப்படுகின்றது.)*

ஒரு நோயாளி ஒரு மருந்துப் போத்தலிலுள்ள அறிவுறுத்தல்களை வாசிக்கத் தெரியாததும் அல்லது ஒரு அபாய, எச்சரிக்கை குறியீட்டை வாசிக்கத் தெரியாததும் உண்மையில் ஒரு கவலைக்குரிய விடயம். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வயது வந்தோர்களில் நால்வரில் ஒருவர் எழுத, வாசிக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றனர். அத்துடன் உலகம் முழுவதிலும் 125 மில்லியன் குழந்தைகளுக்கு அடிப்படை கல்வி கற்பதற்கு சந்தர்ப்பம் கிட்டாததும் ஒரு கவலையான விடயம்.

யுனஸ்கோ அமைப்பு எழுதப் படிக்கத் தெரியாதவர்களைப் பற்றி விபரிக்கையில் "நாளாந்த வாழ்க்கையில் ஒரு சாதாரண, சிறிய விடயங்களை எழுதவோ, வாசிக்கவோ, புரிந்து கொள்ளவோ தெரியாத ஒருவர்" எனக் கூறுகின்றது. சமூகத்தில் வாழும் ஒருவர் அவர் ஆணாக இருந்தாலென்ன பெண்ணாக இருந்தாலென்ன தாங்கள் புரியும் தொழிலின் நிமிர்தமாகவேனும் எழுதவும், வாசிக்கவும் தெரிந்திருப்பதோடு தன்னுடைய முன்னேற்றத்திற்கு மட்டுமன்றி வளர்ச்சிக்காகவேனும் இவற்றுடன் கணக்கீடு முறையினையும் தெரிந்திருப்பது அவசியம். யுனஸ்கோ அமைப்பு தொழில் திறமை பற்றி விபரிக்கையில் "சகல செயற்பாடுகளின் முன்னேற்றத்திற்கும், சமுதாய வளர்ச்சிக்கும் எழுத, வாசிக்க, கணக்கீடு செய்வதற்குரிய திறமை முக்கியமாகத் தேவைப்படுகின்றது. இதன் மூலமாக அவர் தனது சொந்த சமுதாயத்தையே வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல இயல்கிறது" என்கின்றது.

ஒருவர் எப்படிச் செழுமையாக,சக்தி வாய்ந்த தகவல் பாவனையாளராக வர முடியும்? மக்களுக்கு தகவல் பயிற்சி பற்றிய கல்வியும் கட்டாயம் தேவை.சிலர் சரளமாக வாசிப்பவராக இருந்தால் அவர்

தகவல்களுக்காக மற்றவரை நம்பியிருக்கமாட்டார். தாங்களே அதைப் பற்றி முடிவுகள் எடுத்து அதனை தமது வாழ்க்கையிலும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பார். நூலகங்கள் மூலமாக தொழில் திறமை நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வரும் வழிகளில் ஒழுங்கு படுத்தலாம். சமுதாயத்தின் முக்கிய பிரச்சினையைக் கையாளும் வழி முறையைக் கற்பித்தல்,தேககக நலம், விவசாய தொழில் நுட்பம், குடிசைக் கைத்தொழில் தகவல்கள், மற்றும் குறைகள் இருக்கும் பகுதிகளிலுள்ள சமுதாயத்தினரை நல்வழிகககு கொண்டு வருதல் என்பனவாகும்.

தகவல்களின் அபரிதமித வளர்ச்சியினாலும். சேகரித்தல் உருவாக்குதல் என்பவற்றின் துரித முன்னேற்ற மாற்றங்களினாலும் நாம் ஒரு தகவல் சகாப்தத்திற்குள் வந்திருக்கிறோம். ஆனால் நாங்கள் இதற்கு தயாரா? தகவல் சமூகத்திற்கு உள்ள முன் நிபந்தனை தகவல் திறமையாகும்.தகவல் சாதனங்களுக்கு அறிவாற்றல், தொழில் நுட்பம் என்பவற்றைப் பாவித்து பிரச்சனைகளுக்கு முடிவுகள் எடுக்கலாம். தகவல் சகாப்தத்தை வெற்றியடையச் செய்வதற்கு எவ்வாறு மக்களைத் தயார் பண்ணலாம்? தொடர்ச்சியான மாற்றங்களை நாம் பாதுகாத்து வருவோமானால் ஆசிரியர்களும், பயிலுனர்களும் கட்டாயமாக தொடர்ச்சியான பயிற்றுவிப்பாளர்களாக இருப்பார்கள்.

எவ்வாறு ஒருவர் தகவலைப் பற்றி ஒன்றும் தெரியாதவராக இருக்கின்றார்?

- தகவல்களைப் பற்றி ஒன்றுமே தெரியாமை. ஒருவர் தகவல் தேவைப்படும் பொழுது அவற்றை இனங்கண்டு புத்தி நுட்பத்துடன் அதன் இருப்பிடத்தை அறிந்து,மதிப்பீடு செய்து, தேவைப்படும் தகவல்களை நற்பயன் அளிக்கக் கூடியதாக உபயோகித்தல்.
- கடைசியாக,தகவல் தெரியாதவர்களுக்கு எப்படி அவற்றைக் கற்று கொடுக்க வேண்டும் என்பதை பின்வருமாறு வகுக்கலாம்.
    - அறிவை எப்படி அபிவிருத்தி செய்வது
    - தகவல்களை எப்படி கண்டு பிடிப்பது
    - ஏனையவர்கள் கற்றுக் கொள்வதற்காக தகவல்களை எப்படி உபயோகிப்பது.
- இவை மக்களுக்கு ஒரு நீண்ட கால கற்கையாக இருப்பதால்,அவர்கள் எப்பொழுதும் தேவைப்படும் தகவல்களை கற்கவும்,முடிவுகளை எடுக்கவும் முடியும்.



அமெரிக்கன் நூலக சங்கம் தகவல்களை அச்சிட்ட நூல்கள் மூலம் அறிமுகப்படுத்தலாம். அவையாவன அச்சிடப்பட்ட சொற்கள், விவரணங்கள், புகைப்படங்கள், வரை படங்கள், அட்டவணைகள், மடக்கைகள், பலவகைப்பட்ட தகவல் சாதனங்கள், ஒளிப்பதிவுகள், கணனி வரை படங்கள் என்பனவாம். எதிர்காலத்தில் நாம் நினைத்து பார்க்க முடியாத அளவிற்கு இவை மேலும் புது மெருகுடன் வெளி வரலாம்.ஒருவர் தகவலில் திறமை பெற விரும்பின் அவனோ அல்லது அவளோ மேற்குறிப்பட்ட வகையான அச்சிட்ட நூல்களைப் பாவிக்கலாம்.இவை அடிப்படை திறமைகளிலும் பார்க்க சிறந்தவை.கத்லீன் ஸ்பிட்சர் (Kathleen spitzer) என்பவர் இந்த நூல்களைப் பாவிப்பதற்கு நான்கு திறமைகள் தேவை என்கிறார்.அவையாவன:-

### பார்வைத் திறமை

பார்வைத் திறமை என்பது "உருவங்களின் உபயோகங்கள், அவற்றைப் பற்றிய விளக்கங்கள், மற்றும் அவற்றைப் பற்றி நினைக்கும் ஆற்றல்,கற்கும் ஆற்றல் என்பவற்றை விளக்கிக் கொள்ளும் திறமை யாகும்" (பிராடென் அனட் ஹோடீன், 1982) இவற்றை பின்வருமாறு வகுக்கலாம்.

- கற்கும் பார்வை:- பார்வைக்குரிய காட்சிகளை பற்றிய அறிவை உருவாக்குதல்.
- சிந்தனைப் பார்வை:-மனதால் உருவங்களை பல வடிவங்களில் அமைத்தல்,கோடுகள், நிறங்கள் நூற்களின் அமைப்பு என்பனவாகும்.
- தொடர்பாடல் பார்வை:-பார்வைக்குரிய குறியீடுகள் மூலம் எண்ணங்களை வெளிப்படுத்துதல்.அத்துடன் அதன் அர்த்தங்களை எடுத்துக் கூறல்.

### ஊடகத் திறமை

குறிப்பிட்ட இடங்களிலிருந்து வரும் தகவல்களை பகுப்பாய்தல்,தயாரித்தல் என்பனவாம். வானொலி, தொலைக்காட்சி, அசையும் படங்கள், பதிவு செய்யப்பட்ட இசை, புதினப் பத்திரிகைகள், என்பன இதில் அடங்கும். இந்தச்சாசனங்கள் உதவியுடன் கற்பித்தல், பயிற்சிகள் என்பவற்றை நிகழ்ச்சி நிரலிட்டு விரிவாக்கலாம்.

### கணனித் திறமை

ஒருவர் கணனித் திறமையில் பயிற்சி பெற்றிருந்தால் அதன் மூலம் ஆவணங்களைத் தயார் செய்து உருவாக்கலாம். மற்றும் தரவுகளையும் செய்முறைப்படுத்தலாம், ஈமெயில் மூலமாக துரித தொடர்பாடல் வசதி களைப் பெறலாம். மென்பொருளை உபயோகிப்பதன் மூலம் தற்காலத் தகவல்களையும் பெறலாம்.

வலைப் பின்னல் திறமை

இதன் மூலம் வலைப் பின்னல் சூழலை ஏற்படுத்தி WWW என்ற வெப் தளத்தினூடாக தகவலைப் பெறலாம். வலைப் பின்னல் திறமையை ஒருவர் பெற விரும்பின் அதனுடைய வளங்கள், சேவைகள் பற்றியும்,அதனுடைய முறைமையைப் பற்றியும், அறிந்திருப்பதுடன் தீர்மானங்கள் எடுக்கும் தகவலைப் பெறும் விதத்தையும் அறிந்திருக்க வேண்டும்.

பகுத்தறியும் திறமைகளின் விரிவாக்கம்

பலவிதமான அச்சிடப்பட்ட படிவங்களில் பெரும் எண்ணிக்கையான தகவல்கள் இப்பொழுது கிடைக்கின்றன.இவற்றின் வழிச் செல்வதால் மட்டும் எமக்கு பதில் கிட்டாது. நீங்கள் தான் எது இலகுவானதும், துரித மானதுமான,தகவல் என்பதை கண்டு பிடிக்கும் சக்தியை ஏற்படுத்த வேண்டும்.அத்துடன் தகவல்கள் சரியாகத் தெரிந்து கொள்வதையும், அவசியமான தகவல் எது என்பதையும் பிரித்தெடுக்க வேண்டும். இதனை செய்வதற்கு ஒருவர் பகுத்தறியும் சிந்தனையையும், பகுத்தறியும் திறமையையும் விரிவாக்கம் செய்தல் வேண்டும். பகுத்தறியும் திறமைகள் மூன்று பரிமாணங்களில உள்ளன.அவையாவன:-

1) இணைப்பு:- கேள்வி கேட்டல், வரையறுத்தல்,தேடுதல், இருப்பிடத்தைக் கண்டு பிடித்தல், காணுதல்.
2) ஒருவருக்குகொருவர் செய்யும் செயல்:-கேள்வி கேட்டல்,சவால் விடுதல், மதிப்பிடுதல், வழி காட்டல், பகுப்பாய்தல், ஒழுங்கு படுத்துதல், தெரிந்து கொள்ளல், விளங்குதல், தொகுப்பு பிரதிபலித்தல்.
3) பயன்படுத்துதல்:-மனுச்செய்தல்,உதவி தேடுடல்,வழி காணல், தேவைகளைப் பூர்த்தி செய்தல், தீர்மானமெடுத்தல், கோரிக்கைகளை விபரித்தல்.

எல்லா வயது மக்களும் தகவல்களில் திறமையான அறிவைப் பெற்றிருத்தல் அவசியம்.இதில் பாடசாலைகள்,நூலகங்கள் என்பன படிப்பறிவில்லாத மக்களுக்கு தகவல்களை உருவாக்கிக் கொடுப்பதில் முக்கிய பங்கை ஆற்ற வேண்டும்.இதில் நூலகங்களின் பங்கு இரு மடங்காகும்.

1) மின்னியல் மற்றும் அச்சுத் தகவல்களுக்கு போதிய தேவையான விளக்கங்களை அளிக்க வேண்டும்.
2) தகுந்த பயிற்சி நெறிகளை ஏற்படுத்த வேண்டும்.

இந்த யோசனைகள் பொது நூலக விஞ்ஞாபனத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டு, யுனெஸ்கோவினால் அங்கீகரிக்கப்பட்டவை ஆகும்.

(தொடரும்)



## பொதுநூலக தொண்டர்கள் சான்றிதழ் பெறும் வைபவம்



பொதுநூலகங்களின் தொண்டர்களாக இணைந்து பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தால் நடாத்தப்பட்டது. அவ்வேளையில் மாகாண கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் G.A. சந்திரசிறி அவர்களிடமிருந்து சுன்னாகம் பொதுநூலகத் தொண்டர் ஒருவர் சான்றிதழ் பெறுகிறார்.



சுன்னாகம், உடுவில் பொது நூலகங்களில் பயிற்சி பெற்ற நூலகத் தொண்டர்களுடன் நூலகர்களும் வலி. தெற்கு பிரதேசசபை செயலாளர் அவர்களும் காணப்படுகின்றார்கள்.

## வறுமை எனும் கொடுமை

கொடிது கொடிது
வறுமை கொடிது!
பாழ்பட்ட மண்ணில்
மனித இனம்!
உண்ண உணவின்றி
பட்டினிச்சாவை
எதிர்நோக்கி
நாதியற்றுத் திரிகிறது!
சொந்தமில்லை. காரணம்
வறுமை எனும் கொடுமை!
உடல் மெலிந்து
என்பும் தோலுமாய்
உடுக்க உடையில்லை!
இருக்க இடமில்லை!
இல்லை! இல்லை!
வாழவே ஆசையில்லை!
சாவுடன் போராடி
வறுமை எனும்
பள்ளத்தில்
வெறுமையாய் விளையாடுது!
மனித இனத்துக் கென்றே
படைக்கப்பட்ட பரிசு!
அதுதான்
வறுமை எனும் கொடுமை!

ச. நளாஜினி
மயிலணி

காலங்காலமாக, விலைமதிப்பற்ற பொக்கிஷங்களை
வைத்துப் பாதுகாப்பது போல, புத்தகங்களில்,
அரிய உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன.
தங்கம், வைரம் போன்றவற்றை விட
அவை விலைமதிக்க முடியாதவை.
இறந்து விட்டவர்களின் சமாதிக்குள்
சுல்தான்கள் வைத்த
முத்து, பவளம், வைடூர்யம், போன்ற
வெகு உயர்ந்த செல்வங்கள் போன்ற,
உங்களை வாழ்வில் உயர்த்தும் பெரும் உண்மைகள்
புத்தகங்களில் புதைந்து கிடக்கின்றன.

- வோர்ட்ஸ்வர்த்


நாகரிகத்தின் உச்ச நிலையில் கூட மக்களுக்கு
உண்மையான மகிழ்ச்சியைக் கொடுப்பது புத்தகங்களே

- எமர்சன்

நல்ல யோசனைகளுக்காக அன்றாடம் போராடித்
தேடிக்கொண்டிருக்கிறோம். நம்மை எல்லாம்
தற்காலத்தில் பாதுகாப்பது செய்தித்தாள்களே!

- ஹின்ரிச் ஹெயின்







வலி. தெற்கு பிரதேச சபை காட்சிக் கூடத்துக்கு வருகை தந்த
மாகாண கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் G.A. சந்திரசிறீ
மற்றும் அதிகாரிகள்



நூலகம்